பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 27 செவ்வாய்க்கிழமை 11.02.2020 கதிர் 97

இனி இது ரகசியம் அல்ல!

ஐக்கிய தேசியக் கட்சியின் உள் வீட்டுப் பிரச்சினை 'சணம் பித்தம் சணம் வாதம்' என்ற மாதிரி என இப் பத்தியில் ஏற்கனவே இரண்டொரு தடவை கூறியிருந்தேன். நிலைமை அப்படித்தான் இப்போதும் தொடருகின்றது.

நேற்றுக் காலை பக்கம் 02 »

# சஜித் தலைமையில் உதித்தது மக்கள் சமாதானக் கூட்டணி!



## இதயம் சின்னத்தில் களமிறங்கும்

கொழும்பு, பெப். 11.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ள சஜித் பிரேமதாஸ தலைமையிலான தேர்தல் கூட்டுக்கு 'மக்கள் சமாதானக் கூட்டணி' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தக் கூட்டணி யானைச் சின்னத்தில் களமிறங்கும் என எதிர்பார்த்திருந்த நிலையில் அதற்கு மாறாக புதிய கட்சி ஒன்றையும் சின்னம் ஒன்றையும் நேற்றுத் தேர்வு செய்து ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவர் தரப்புக்கும் அதிர்ச்சி கொடுத்திருக்கிறது சஜித் தரப்பு. பக்கம் 03 »

## விக்கியின் கூட்டணி நாற்காலிக்கான கூட்டு

### சாடுகிறது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

யாழ்ப்பாணம், பெப். 11

முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி நாற்காலிக்கான கூட்டேயாகும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த சட்டத்தரணி க. சுகாஷ் பக்கம் 03 »

## இணக்கப்பாடின்றி முடிந்தது ஐ.தே.க. செயற்குழுக் கூட்டம்



கொழும்பு, பெப். 11

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டம் நேற்றும் இணக்கப்பாடின்றி முடிவடைந்தது.

மக்கள் சமாதான கூட்டணியென்ற பெயரில், இதயம் சின்னத்தில் போட்டியிடுவதெனச் சஜித் தரப்பு நேற்றுக் காலை தீர்மானித்திருந்த நிலையில், பக்கம் 03 »

## மைத்திரி மீது விரைவில் இன்னுமொரு வழக்கு!

பொலிஸ்மா அதிபரை சட்டத்துக்கும் அரசமைப்புக்கும் முரணாகக் கைது செய்து, விளக்கமறியல் சிறையில் தடுத்து வைத்தமை தொடர்பாக இன்னும் சில நாள்களுக்குள் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவுள்ளதாக சர்வதேச அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பானது இலங்கை பக்கம் 03 »

## கிளிநொச்சியில் சிறுவனுக்கு போதைப்பொருள் திணிப்பு!

கிளிநொச்சி, பெப்.11

கிளிநொச்சி – சாந்தபுரம் பகுதியில் நேற்று 16 வயதுச் சிறுவன் ஒருவருக்கு வற்புறுத்தி போதைப் பொருள் வழங்கப்பட்டுள்ளது.

சாந்தபுரம் பகுதியைச் சேர்ந்த சிறுவனுக்கே, இவ்வாறு போதைப் பொருள் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், பாதிக்கப்பட்ட சிறுவன், தனது பொற் பக்கம் 02 »

## குடியிருக்கும் மக்களை விரட்டி விட்டு காணி அபகரிக்க இராணுவம் முயற்சி!

கிளிநொச்சி, பெப்.11

கிளிநொச்சி – தேராவில் மாவீரர் துயிலுமில்லை காணிக்குப் பின்புறமாக உள்ள காணியில் வசித்து வரும் மக்களை, வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் துணையுடன் வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை இராணுவத்தினர் நேற்று முன்னெடுத்தனர். இதனால், அந்தப் பகுதி மக்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. பக்கம் 02 »

## சாவகச்சேரி விபத்தில் வயோதிபர் மரணம்!



யாழ்ப்பாணம், பெப். 11

சாவகச்சேரி, அரசடிச் சந்தியில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் பக்கம் 03 »

## மேலும் 8 மாணவர்களுக்கு இடைக்கால தடையுத்தரவு

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில், பகிடிவதையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் மேலும் எட்டு மாணவர்களுக்கு நேற்று முதல் பல்கலைக்கழக நிர்வாகத்தால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இரண்டு மாணவர்களுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் மேலும் 8 மாணவர்களுக்கு தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. (ஐ-07)

## வெலிக்கடைச் சிறைக்குள் திடீரென புகுந்த கோட்டா!

### தமிழ் அரசியல் கைதிகளையும் பார்வையிட்டார்

கொழும்பு,பெப்.11

கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்றிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் பார்வையிட்டார்.

ஜனாதிபதியுடன் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் சென்றிருந்தார்.

கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு நேற்று மாலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்அறி பக்கம் 03 »

## பல்கலையில் பகிடிவதை செய்த மாணவர்கள் மீது சட்டம் பாயும்!

### வடக்கு மாகாண ஆளுநர் உறுதி



யாழ்ப்பாணம்,பெப்.11

யாழ். பல்கலைக்கழகக் கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்ற பகிடிவதை தொடர்பான அனைத்துத் தகவல்களும் சமர்ப்பிக்கப்படும்போதுசம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர்பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார். பக்கம் 03 »

## விசாரணைகளின்றி தடுப்பில் உள்ள கைதிகள் தொடர்பில் ஆராயக் குழு

### வெலிக்கடையில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 11

குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல்செய்யப்படாமல் நீண்டகாலமாக வெலிக்கடையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் விசாரணை நடத்தக் குழு ஒன்றை நியமிப்பார் எனத் தடுப்புக் காவலில் உள்ளவர்களிடம் ஜனாதிபதி உறுதியளித்தார்.

இந்தத் தகவலை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் செய்திக் குறிப்பில்து தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று (நேற்று) மாலை வெலிக்கடைச் சிறைச்சாலைக் குத்திடீர் கண்காணிப்புப் பயணமொன்றை மேற்கொண்டார்.

திறந்த வெளியில் நடமாடிக் கொண்டிருந்த பக்கம் 03 »

# வடக்கு மாகாணச் சுற்றுலாப் பணியகம், போக்குவரத்து அதிகார சபைக்கு புதிய தலைவர்கள்



யாழ்ப்பாணம், பெப். 11

வடக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மற்றும் வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் ஆகிய வற்றுக்கு புதிய தலைவர்களை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் நியமித்துள்ளார்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முன்னாள் பிரதி கல்விப் பணிப்பாளர் சுப்பையா அமிர்தலிங்கம் வடக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவராகவும் கால்நடைகள் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற பணிப்பாளர் நாயகமான மருத்துவ கலாநிதி ஆறுமுகம் சிவசோதி, வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநரின் செயலகத்தில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் இவர்களுக்கான நியமனக் கடிதங்களை நேற்று திங்கட்கிழமை வழங்கினார்.

வடக்கு மாகாண ஆளுநராகப் பொறுப்பேற்ற பின்னர் நிர்வாக மட்டத்தில் ஆளுநர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் வழங்கும் முதலாவது நியமனங்கள் இவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நான் ஓடிப்போன முதலமைச்சரா?

## கொதிக்கிறார் வரதர்

யாழ்ப்பாணம், பெப்.11

நான் ஓடிப்போன முதலமைச்சரா எனக் கொந்தளித்துள்ளார் வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதாராஜப்பெருமாள்.

யார் இந்த நாட்டிலிருந்து ஒளியவில்லை? ஒன்றில் அரச படைபாதுகாப்பில்லாமல் அல்லது புலிகளின் படையின் பாதுகாப்பில்லாமல் யாராவது இந்த நாட்டில் இருந்தார்கள் எனச் சொல்லட்டும் பார்க்கலாம். அந்த இரண்டும் இல்லாததால்தான் நான் நாட்டைவிட்டு வெளியேறினேன் என அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டணியை உருவாக்குபவர்கள்தான் ஒற்றுமை குறித்து அழைப்பை மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும். தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாக அணி திரளவேண்டும் என நாங்கள் ஏற்கனவே அழைப்பு விடுத்துள்ளோம். ஆனால் அப்படியான அழைப்புகளை விடாமல் யாரும் வந்து இணையலாம் எனப் பொதுவாக அழைப்பு விடுகிறார்கள். இதைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செய்கிறது. அப்படியானால் இவர்கள் எல்லோரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சேர்த்துக் கொள்வார்களா என்று கேட்டால் அதுவும் இல்லை.

ஆனபடியால் இப்படியான கூட்டமைப்பை ஏற்படுத்த முற்படுபவர்கள் அனைவரையும் அழைக்கவேண்டும். பேச வேண்டும். உடன்பாட்டுக்கு வர முடியுமா எனப் பார்க்க வேண்டும். அதன் அடிப்படையில் ஒன்று சேர்ந்து இணைய வேண்டுமே தவிர, வந்து எங்களுடன் இணையுங்கள் என்று சொல்வதெல்லாம் ஏற்கமுடியாதது. எங்களுக்கு ஆதரவு தாருங்கள், நாங்கள் நாடாளுமன்றத்துக்கும் மாகாண சபைக்கும் போகிறோம் என்ற அர்த்தத்தைத் தவிர அதில் வேறு ஏதும் இல்லை. அதேபோலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வார்த்தைகளும் உள்ளன. எனவே அவ்வாறான முயற்சிகளை விட்டுவிட்டு ஏனைய கட்சிகளோடு சகோதரத்துவத்துடன் பேசும் முயற்சியை அவர்கள் முன்னெடுப்பதாக இருந்தால் அவர்களுடன் பேசுவதற்கு நாங்கள் மறுக்கமாட்டோம்.

உடன்பாட்டுக்கு வரலாமா என அவர்களுடன் பேசத் தயாராக இருக்கின்றோம். உடன்பாட்டுக்கு வந்தால் இணைந்து செயற்படுவதற்கும் தயாராக இருக்கிறோம். அவர்களே சொல்கிறார்கள் இது கொள்கை அடிப்படையிலான கூட்டு என்று. அந்தக் கொள்கை என்னவென்பதையும் அவர்கள் சொல்லவேண்டும்.

இவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து என்னவெல்லாம் செய்து இருக்கிறார்கள், இவர்கள் இருந்தபோது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எப்படி செயற்பட்டது என்பது இப்போது வெளியே வந்திருக்கிறது. பதவிக்கு வந்த பின்னர் எப்படி மக்களை மறந்து மக்களின் நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டார்கள் என்பது தெரிய வந்துள்ளது. அதிலிருந்து இவர்கள் வேறுபட்டவர்கள் அல்லர். இவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அதையே செய்தவர்கள்தான்.

ஆகவே அதிலிருந்து பிரிந்து இன்னொரு கூட்டணி அமைத்து விட்டால் மட்டுமே இவர்கள் நல்லவர்களாகவும் சரியானவர்களாகவும் மாட்டார்கள்.

தமிழர்கள் மத்தியில் பார்க்கப்படும் பத்திரிகைகளுக்கு மட்டும் விடிந்தால் பொழுதுபட்டால் அறிக்கைகளை விட்டு தமிழர்களுக்குச் சேவை செய்கிறோம், உரிமைகளைப் பெற முயற்சிக்கிறோம் என்கின்ற அரசியலில் எந்தவிதப் பிரயோசனமும் இல்லை. சிங்கள மக்கள் மத்தியில் நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தும் விதமாக பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்தியாவில் இருக்கக்கூடிய மக்கள், சர்வதேச சமூகம் ஆகியவற்றின் ஆதரவு இருக்கவேண்டும். இவர்களின் கொள்கை நிலைப்பாட்டுக்கு எங்கிருந்தாவது ஆதரவு உள்ளதா?

இவர்களின் நிலைப்பாடுகள் எனச் சொல்லப்படுபவை எல்லாம் நிராகரிக்கப்பட்டவை. அதனால் இவர்களுடைய பிழையான கொள்கைகள் எல்லாம் பேச வேண்டியுள்ளன.

தமிழ் மக்களின் அபிவிருத்திக்கான குரல்களையும் உரிமைக்கான குரல்களையும் ஒரே நேரத்தில் கொண்டு செல்கின்ற – வெறும் அறிக்கைகளுடன் நில்லாமல் யதார்த்த பூர்வமாகச் செயற்படுகின்ற – கட்சிகளுடன் சேர்ந்து செயற்படவேண்டும் என்பது நமது நிலைப்பாடு. அதற்காக எங்களால் முடிந்தளவு முயற்சிகளையும் நாங்கள் மேற்கொள்கிறோம். ஆனால் அவையெல்லாம் நிறைவேறாத துரதிஷ்டமான நிலைமை ஏற்படுமாக இருந்தால் நாங்கள் தனியாகவும் போட்டியிடுகின்ற முடிவை எடுத்து வைத்துள்ளோம்–என்றார்.

இதன்போது, செய்தியாளர் ஒருவர், 'நீங்கள் நாட்டை விட்டுச் சென்று ஒளிந்தாக..' எனக் கேள்வியெழுப்ப முயன்ற போது, சற்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில்–

'யார் இந்த நாட்டிலிருந்து ஒளியவில்லை? ஒன்றில் அரச படைப் பாதுகாப்பில்லாமல் அல்லது புலிகளின் படையின் பாதுகாப்பில்லாமல் யாராவது இந்த நாட்டில் இருந்தார்கள் எனச் சொல்லட்டும் பார்க்கலாம். அந்த இரண்டும் இல்லாதமையால்தான் நான் நாட்டைவிட்டு வெளியேறினேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் எனச் சொல்லப்படுபவர்கள் புலிகளுக்கும் ஆதரவாக இருந்து கொண்டு, இலங்கைப் படைகளின் பாதுகாப்பில் வாழ்ந்தார்கள். இந்த இரண்டு பேரும் இல்லையென்றால் அவர்கள் இந்த நாட்டில் இருந்திருக்கமாட்டார்கள். அந்த இரண்டும் இல்லாதமையால்தான் நான் வெளியில் சென்றிருக்க வேண்டியேற்பட்டது. ஆகவே இந்தக் கதைகளையெல்லாம் இங்கு விட முடியாது. இது அரசியல் உள்நோக்கமுடைய பிரச்சாரம்" –என்றார். (ஐ-07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை, அப்பதவியை அவரிடம் இருந்து தட்டிப்பறிக்கும் முழு முனைப்பில் இருக்கும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க.வின் பிரதித் தலைவருமான சஜித் பிரேமதாஸா சந்தித்தார். அதன் பின்னர் சஜித் பிரேமதாஸா தலைமையில் அமையப் போவதாகக் கூறப்படும் புதிய அரசியல் கூட்டணியின் பொதுச் செயலாளர் என சஜித்தினால் பெயர் பிரேரிக்கப்பட்ட ரஞ்சித் மத்துமபண்டார எம்.பியும் அந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

அதன் பின்பு கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் கட்சியின் செயற்குழு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடியது.

அச்சமயம், செயற்குழு உறுப்பினர்களுக்கு ஒரு தகவல் வெளியிடப்பட்டது.

இதுவரை காலமும் சரத் பொன்சேகாவின் செயலாளராக இருந்தவர் வசம் – அல்லது அவரது கட்டுப்பாட்டின் கீழ் – இருந்த 'தேசிய ஐக்கிய முன்னணி' என்ற கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாஸாவும், செயலாளராக ரஞ்சித் மத்துமபண்டாரவும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் –

இருதயச் சின்னத்தைக் கொண்ட அந்தக் கட்சியின் நிர்வாகிகள் பற்றிய விவரம் தேர்தல் ஆணையகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் – கூறப்பட்டது. .

மேற்படி கட்சியின் கட்டுப்பாடு தமது கைகளுக்கு வந்திருப்பதால் அதன் கீழேயே புதிய கூட்டு அமையும் என்றும் சஜித் தரப்பினால் செயற்குழுவுக்குக் கோடி காட்டப்பட்டது. ஆனால் அதனை ஏற்க செயற்குழுவில் இடம்பெற்றிருக்கும் ரணில் தரப்பினர் மறுத்து விட்டனர்.

ஐ.தே.கட்சிக்கு வெளியே போய் வேறு ஒரு கட்சியின் கூட்டில் கட்சியை இறக்குவதற்கு இடமளிக்க முடியாது என ரணில் ஆதரவாளர்களான வஜிர அபேவர்த்தன, லக்ஷ்மன் கிரியெல்ல, அகிலவிராஜ் காரியவசம், சாகல இரட்ணாயக்கா, ரவி கருணாநாயக்க ஆகியோர் உடும்புப் பிடியாக நின்றனர்.

ஐ.தே.கவும் சேர்ந்து அமைக்கும் புதிய அரசியல் கூட்டணிக்கு சஜித் நியமித்த பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவை அப்பதவிக்கு அங்கீகரித்த செயற்குழு, ஆனால் அந்தக் கூட்டணி ஐ.தே.க.வின் கீழ் யானைச் சின்னத்தில்தான் தேர்தலில் போட்டியிட வேண்டும் என ஒற்றைக் காலில் நின்றனர்.

இதனால் சீற்றமுற்ற சஜித் தரப்பினர் இனிமேலும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது என்று கோபாவேசத்துடன் கூறிவிட்டு இடைநடுவில் செயற்குழுவில் இருந்து வெளியேறினர்.

இப்படிக் குழப்பத்தில் கூட்டம் முடிவுற்ற பின்னரும், இந்த விடயம் குறித்து மீண்டும் அடுத்த வாரம் ஆராயவுள்ளோம் என்று கட்சியின் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் கூறினார்.

ஆனாலும், இதற்குப் பின்னரும் இரு தரப்புகளும் ஒன்றுபட்டு செயற்படும் என நம்புவதற்கு அதிக இடம் இல்லை எனக் கொழும்பு அரசியல் விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டார்.

ஐ.தே.கட்சிக்குத் தெரியாமல் – அதன் அங்கீகாரமோ அனுமதியோ பெறாமல் – பிறிதொரு பதிவு செய்யப்பட்ட கட்சியின் தலைமைப் பதவியையும், பொதுச் செயலாளர் பதவியையும் சஜித்தும், மத்துமபண்டாரவும் ஏற்றுள்ளனர். இதைக் காட்டியே – கட்சி விரோத நடவடிக்கை எனக் குற்றம் சுமத்தி – அந்த இருவரையும் ஐ.தே.கட்சியிலிருந்து அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து விலக்க முடியும்.

ஆனால், கட்சிக்குள் தலைமைப் பதவியைத் தக்கவைப்பதற்கு அல்லாடும் ரணில் விக்கிரமசிங்கவிடம் அத்தகைய அரசியல் துணிச்சல் – தைரியம் – இருக்குமோ தெரியவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தபடியே, மொட்டுச் சின்னக் கட்சியான பொதுஜன பெரமுனவை ராஜபக்ஷக்கள் கட்டியெழுப்பிய போது, அதனைத் தட்டிக்கேட்கத் துணிவற்றவராக – லாயக்கற்றவராக – இருந்த அப்போதைய சு.க. தலைவரான (அப்போதைய) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போலதான் இப்போது ஐ.தே.கட்சியிலிருந்தபடியே தமது இருதயச் சின்னக் கட்சியையும் அணியையும் சஜித் பிரேமதாஸ அணி கட்டியெழுப்பப் போவதை வெறுமனே பார்த்திருக்க வேண்டிய கட்டாயத்தில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இருக்கின்றார் போலத் தெரிகின்றது.

அப்படியே இருந்தாலும், ராஜபக்ஷக்கள் தங்களுக்கென்று ஒரு கட்சியை ஆரம்பதிலிருந்து கட்டியெழுப்பி சாதித்தமை போன்று சஜித் தரப்பால் முடியுமா, அதற்கு வாய்ப்புண்டா, போதிய கால அவகாசம் உண்டா என்பவையெல்லாம் கேள்விக் குறியே.

தென்னிலங்கையில் அரசியல் போகின்ற போக்கை நோக்கும் போது எதிர்வரும் பொதுத் தேர்தல் அங்கு ஐம்முனைப் போட்டியாக அமையும் போலத் தெரிகின்றது.

ஒருபுறம் – பொதுஜன பெரமுன மொட்டுச் சின்னத்தில்.

மறுபுறம் – அதன் கூட்டணியில் இணைமுடியாத இக்கட்டில் இருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கைச் சின்னத்தில் அல்லது கதிரைச் சின்னத்தில்.

பிறிதொருபுறம் – ஐ.தே.கட்சியும் அதனுடன கூட்டில் எஞ்சப்போகின்ற பிற கட்சிகளும் யானைச் சின்னத்தில்.

இன்னொருபுறம் – சஜித்தும் அவருடக் கூட்டுச் சேரும் தரப்புகளும் இதயச் சின்னத்தில்.

தனியாக – ஜே.வி.பி. அணி மணிச் சின்னத்தில்.

– இப்படி ஐமுனைப் போட்டிக்குத் தெற்கில் களம் திறந்திருப்பதாகத் தோன்றுகின்றது.

எது,எப்படி என்றாலும் இப்படிப் பல முனைப் போட்டிகள் அமைவது மொட்டுச் சின்னத்துக்கு பெருவெற்றி வாய்ப்புக்கு இடமளிக்கும் என்பது போலத்தான் தோன்றுகின்றது.

– மின்னல்–

## குடியிருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து, சம்பவத்தைக் கேள்வியுற்று அங்கு விரைந்த கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவராஜா அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது கருத்துரைத்த அப்பகுதி மக்கள், இந்தக் காணி யில், தாங்கள் 1996ஆம் ஆண்டில் குடியேறி வாழ்ந்து வந்தபோது, மாவீரர் துயிலுமில்ல பாதுகாப்பு காரணங்களுக்காக, தாம் அப் பகுதியில் இருந்து தற்காலிகமாக வெளியேறினர் எனத் தெரிவித்தனர்.

பின்னர், 2010ஆம் ஆண்டில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட போது, தாம் மீண்டும் தமது காணிகளைச் சுத்தம் செய்து மீள்குடியேறினர் எனத் தெரிவித்த அவர் கள், 2015ஆம் ஆண்டு, தங்களுக்கான காணிப் பத்திரமும் வீட்டுத் திட்டமும் வழங்கப்பட்டன எனவும் கூறினர்.

இந்நிலையில், மாவீரர் துயிலுமில்லக் காணியில் உள்ள இராணுவத்தினர், வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களின் துணையுடன் தமது காணிகளையும் அபகரிக்க முயல்கின்றனர் என அப் பகுதி மக்கள் குற்றம்சாட்டினர். (ஐ)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றோரிடம் தெரிவித்ததையடுத்து, அது குறித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர். (ஐ)

# வவுனியா அரச விதைப் பண்ணைக்கு கடந்த ஆண்டு ரூ.1 கோடி வருமானம்

வவுனியா, பெப். 11

வவுனியா அரச விதை உற்பத்திப் பண்ணையில் கடந்த வருடம் 1.1 கோடி ரூபா வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 5 வருட காலத்தில் அதிகப்படியான வருமானத்தை ஈட்டிய வருடமாக 2019 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் பண்ணையின் நிகர இலாபமாக 50 இலட்சம் ரூபாவாகவும் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதன் பிரகாரம் விதை நெல் விற்பனை மூலமான வருமானமாக 40 இலட்சம் விதை நடுகைப்பொருட்கள் மூலமாக 45 இலட்சம் ரூபாவும் வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளது.

இதேவேளை, கால்நடை உற்பத்தி வருமானமாக 2015 இல் இருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் சராசரியாக 40 ஆயிரத்தில் இருந்து 50 ஆயிரம் ரூபா வருமானமாக பெறப்பட்ட போதிலும் 2019 ஆம் ஆண்டு 12 இலட்சம் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளதாகவும் விவசாயத் திணைக்களத்தின் வருமான காட்சிப்படுத்தல்களில் தெரியவருகின்றது. (ஐ)

# நாட்டில் கடும் வறட்சி; 2 லட்சம் பேர் பாதிப்பு

கொழும்பு, பெப். 11

நாடளாவிய ரீதியில் தொடரும் வறட்சியான காலநிலை காரணமாக 55 ஆயிரத்து 763 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 30 ஆயிரத்து 29 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இவ்வாறு வறட்சி அதிகம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான குடிதண்ணீரை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த வறட்சியான காலநிலை நெற்பயிர் செய்கையில் பாதிப்பை ஏற்படுத்தாது என விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டப்ள்யூ.எம்.டபுள்யு.வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

எனினும் கடந்த ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நெற்பயிர்ச் செய்கைகளில் ஈடுபடாத விவசாயிகள் இந்த வறட்சி காரணமாக தற்போது பாதிக்கப்பட்டுள்ளனரென அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், மின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வறட்சி காரணமாக குறைவடைந்துள்ள போதிலும் மின் தடையை ஏற்படுத்துவதற்கு எந்தவித தீர்மானங்களும் எடுக்கவில்லை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன கூறினார். (ஐ)

# இணைய வழி மூலம் சிறுவர் துஷ்பிரயோகம்

## இளைஞன் கைதானார்

கொழும்பு, பெப். 11

இணையம் ஊடாக சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட 21 வயது இளைஞன், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் கணினித்துறையில் தொழில் புரிபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர் கடந்த 3 வருடங்களுக்கும் அதிக காலம் சமூக ஊடகங்களில் போலியான கணக்குகளை ஆரம்பித்து சிறுவர்களை ஏமாற்றியுள்ளார். அத்துடன், சிறுவர்களை அச்சுறுத்தி அவர்களின் ஆபாசப்படங்களைப்பெற்று அவற்றை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இணையத்தளங்களில் பதிவேற்றியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சமூக ஊடகங்களில் அவர் தன்னைப் பெண்ணாகக் காட்டிக்கொண்டுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாத சமூக வலைத்தளக் கணக்குகளின் ஊடாகக் கிடைக்கும் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கவேண்டாம் என, குற்றப்புலனாய்வு பிரிவினர் அனைவரிடமும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அத்துடன், தனது தேசிய அடையாள அட்டையை பயன்படுத்தி வேறு நபர்களுக்கு சிம் அட்டைகளை பெற்றுக்கொள்ள இடமளிக்கவேண்டாம் என்றும் தமது சமூக வலைத்தள கணக்குகளின் மின்னஞ்சல் மற்றும் கடவுச்சொற்களை மற்றவர்களுக்குப்பெற்றுக்கொடுக்க வேண்டாம் என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, இணையத்தளம் ஊடாக சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராகவும் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளும் போது, அதனுடன் தொடர்புடைய தரப்பினரும் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டியிருக்கும்.

எனவே, தமது பிள்ளைகள் இவ்வாறான நிலைமைக்கு உள்ளாகாதவாறு பெற்றோர் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஐ)

# கஞ்சா கடத்திய மூவர் கைது!

மட்டக்களப்பு, பெப். 11

மன்னாரில் இருந்து கல்முனைக்கு காரில் 7 கிலோ 675 கிராம் கேரளா கஞ்சா கடத்திய 3 பேர் மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் நேற்று பகல் மடக்கிப் பிடித்து கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது கார் ஒன்றையும் மீட்டுள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

## சாவகச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

காரும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நபர், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-07)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றி பல்வேறு அரசியல் காரணங்களினால் அசாதாரண நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு, பொலிஸ் சேவையில் இருந்து விலகி சென்று, வெளிநாடுகளில் இருக்கும் பொலிஸ் அதிகாரிகள் அதிகமானோரை உள்வாங்கி உருவாக்கப்பட்டதாகும்.

பிரித்தானியாவை மையமாக கொண்டிருக்கும் இந்த அமைப்பானது சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளிலும் செயற்பட்டு வருகின்றது.

அதன் ஒருங்கிணைப்பாளரான முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டரும் தற்போது பிரித்தானியாவில் வசிப்பவருமான அஜித் தர்மபால இது தொடர்பில் கூறியவை வருமாறு:-

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 19 ஆவது அரசமைப்பு சட்டத்திருத்தத்தை மீறி, சட்டம் மற்றும் நீதி அமைச்சைத் தன்னிடம் வைத்துக் கொண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுக்கு, பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவை பொறுப்பு கூற வேண்டுமென கூறிக் கைது செய்து விளக்க மறியலுக்கு உட்படுத்தியமை சட்டத்துக்கு முரணான விடயமாகும்.

மேலும் இந்தச் செயற்பாடானது பொலிஸ் திணைக்களத்துக்குச் செய்யும் அவமானம். இதற்கு முன்னர் ஸாம்பியா, சூடான் ஆகிய நாடுகளில் பொலிஸ்மா அதிபர்களை விசாரணைக்கு உட்படுத்தி இருந்தாலும் உலகில் எந்தவொரு நாட்டிலும் பொலிஸ்மா அதிபர்களை கைது செய்து தண்டிக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

## இணக்கப்பாடின்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின்னம் தொடர்பான இணக்கப்பாடு நேற்றுச் செயற்குழுவில் ஏற்படவில்லை.

கூட்டத்தில் இணக்கப்பாடு ஏற்படாததையடுத்து சஜித் தரப்பு அங்கிருந்து வெளியேறிச் சென்றது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிடவேண்டுமென்ற ஐக்கிய தேசியக் கட்சி செயற்குழுவின் ரணில் ஆதரவு உறுப்பினர்களின் யோசனையை சஜித் பிரேமதாஸ நிராகரித்துவிட்டார் என அறியமுடிகின்றது.

முன்னதாக நேற்று கூட்டணியின் செயலாளர் நியமனத்தில் சர்ச்சை ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டபோதும் அது சுமூகமாக முடிந்த நிலையில் யானைச் சின்னத்தில் போட்டியிட வேண்டுமென ரணில் ஆதரவு உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

ஆனால் இது விடயத்தில் எந்த முடிவும் இறுதி செய்யப்படவில்லை. (ஐ)

## சஜித் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய கூட்டணிக்கு இதயம் சின்னத்தை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நேற்றே விண்ணப்பமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய தேர்தல் கூட்டணியின் தலைவராக சஜித் பிரேமதாஸவை ஐக்கிய தேசியக் கட்சி நியமித்திருந்தது.

அதனடிப்படையிலேயே சஜித் பிரேமதாஸ தலைமையிலான தேர்தல் கூட்டுக்கு 'மக்கள் சமாதானக் கூட்டணி' எனப் பெயரிடப்பட்டு இதயம் சின்னத்தை ஒதுக்கீடு செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் அதன் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ரஞ்சித் மத்துமபண்டார கோரியுள்ளார்.

நேற்றுக் காலை கூடிய சஜித் தரப்பினர் 'எங்கள் தேசிய முன்னணி' என்ற கட்சியைப் பயன்படுத்தித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தனர். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான இதன் தலைவராக சேனக டி சில்வாவும் அதன் செயலாளராக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் டயானா கமகேவும் உள்ளனர்.

இது கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் முந்தைய பல தேர்தல்களிலும் போட்டியிட்ட ஒரு கட்சியாகும்.

கட்சியின் தற்போதைய நிர்வாகத்தை மாற்றி, புதிய நிர்வாகிகளாக தலைவர் பதவிக்கு சஜித்தும் செயலாளர் பதவிக்கு ரஞ்சித் மத்துமபண்டாரவும் நியமிக்கப்படுகின்றனர் என அக்கட்சி சார்பில் முடிவெடுக்கப்பட்டது. அதனை அங்கீகரிக்கும்படி சஜித் தரப்பு நேற்றுத் தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் சின்னம் தொலைபேசியாக இருந்த நிலையில் அதனை இதயம் சின்னமாக மாற்றும்படியும் கோரப்பட்டுள்ளது. (ஐ)

## விக்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் தலைமையில் உருவாகியுள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியானது ஒரு நாற்காலிக்கான கூட்டணியேயன்றி தமிழ் மக்களின் கொள்கையோடு சம்பந்தப்பட்ட கூட்டணி அல்ல.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இன்னொரு வடிவமாகவே நாங்கள் அதனைப் பார்க்கின்றோம்.

இந்தக் கூட்டணியிலுள்ள நான்கு கட்சிகளும் எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் நாலா திசைக்கும் பிரிந்து சென்றுவிடும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சில நாள்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கட்சிகள் இணைந்து ஒரு கூட்டாகத் தம்மை மாற்றுத் தலைமை என்று கூறிக்கொள்வது வெட்கமாக உள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு நிகரான ஒரு மாற்றுத் தலைமை ஆயின் அது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான் – என்றார். (ஐ)

## வெலிக்கடைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தலின்றி கண்காணிப்புக்காகச் சென்றிருந்தார். அங்குள்ள நிலைமைகளை ஜனாதிபதி ஆராய்ந்தார்.

அங்கு தண்டனை பெற்று மற்றும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் அவர் பார்வையிட்டார். தண்டனை பெற்று வரும் தமது தந்தையை பொதுமன்னிப்பில் விடுவிக்கக் கோரி பிள்ளைகள் இருவர் காத்திருக்கும் அரசியல் கைதி ஆனந்தசுதாகரனையும் அவர் பார்வையிட்டார். ஆனால் அவரைத் தனிப்படச் சந்திக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைக்கைதிகளுடன் உரையாடிய ஜனாதிபதி, அவர்களது விவரங்களைக் கேட்டறிந்தார்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் போதைப்பொருள் பாவனையின் காரணமாகச் சிறைத் தண்டனையை அனுபவித்து வருபவர்களாவர்.

சிறைக் கைதிகளின் எண்ணிக்கைக்குப் போதுமான இடத்தைப் பார்க்கிலும் மும்மடங்கு எண்ணிக்கையானவர்கள் சிறையில் உள்ளனர் என அவர்கள் தெரிவித்தனர்.

பிழையான தகவல்களின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்கு அதிக காலம் செல்வதாகவும் அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். இதன் காரணமாக தமக்கு நீண்ட காலம் சிறையில் இருக்க வேண்டியிருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தற்போதைய நிலைமை குறித்து கண்டறிவதற்கு குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார் – என்றுள்ளது. (ஐ)

## பல்கலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர்–

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையே இடம்பெற்ற பகிடிவதை தொடர்பில் நாம் கவனமாகவும் நுணுக்கமாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றோம்.

எனக்குக் கிடைத்த அறிக்கையின்படி பல்கலைக்கழக நிர்வாகம் இந்தப் பகிடிவதையில் ஈடுபட்டோரின் விவரங்களை எடுத்துள்ளது. பல்கலைக்கழக நிர்வாகத்தினரை நான் இன்று (நேற்று) சந்திக்க இருக்கின்றேன்.

அத்தோடு அந்த மாணவர்களுக்கு எதிராகச் சரியான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க இருக்கின்றோம். வடக்கு மாகாண மாணவர்களது அடிப்படை உரிமைகளும் அவர்களது கல்வி நடவடிக்கைகளும் எமது ஜனாதிபதியின் உறுதுணையோடு முன்னெடுக்கப்படும்.

சீரழிந்து செல்லும் இந்தச் சமூகத்தை மீளக் கட்டியெழுப்புவதில் நாம் உறுதியாக இருக்கின்றோம் என்பதை மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தப் பகிடிவதை தொடர்பான அனைத்துத் தகவல்களும் சமர்ப்பிக்கப்படும்போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வடக்கு மாகாணத்தில் கல்வியை மேம்படுத்துவதற்கு பெற்றோரதும் ஆசிரியர்களினதும் ஒத்துழைப்பு எமக்கு அவசியமானது. அத்தோடு ஊடகங்களும் சமூக அமைப்புக்களும் உரிய நேரத்தில் விடயங்களைச் சுட்டிக்காட்டும் போது, அவற்றுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் – என்றார். (ஐ-07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## அநாவசியச் சல்லடை

முக்கியமான ஒரு விடயம் குறித்து அண்மைக் காலத்தில் அதிகம் பேசப்படுகின்றது.

அது வடக்கிலிருந்து தென்பகுதி நோக்கிப் பயணிக்கும் தமிழ்ப் பயணிகள், இடைவழியில் 'ஏ9' பாதையில் வன்னிப் பகுதியில் பல தடவைகள் வழிமறிக்கப்பட்டு தொல்லை பண்ணப்படுகின்ற விடயமாகும்.

யுத்த காலத்தில் இருந்தமை போன்று தீவிர சோதனைக் கெடுபிடிகள்.

வடக்குக்கும் கொழும்பு மற்றும் பிற இடங்களுக்கான சேவைகள் பெரும்பாலும் இரவில்தான் நடைபெறுகின்றன. சொகுசு மற்றும் அரை சொகுசு பஸ்களை நட்ட நடுநிசி நேரத்தில் வழிமறித்து, ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் பயணிகளைத் தட்டி எழுப்பி, பெட்டி படுக்கைகளுடன் பஸ்ஸை விட்டு இறக்கி, வரிசையில் நடக்க விட்டுச் சோதனைக் கெடுபிடி முடிந்த பின்னரும் திரும்பவும் நாற்பது, ஐம்பது மீற்றர் நடக்கப் பண்ணி, பஸ்ஸில் ஏற்றும் திருவிழா தொடர்கின்றது.

ஒரு சோதனைச் சாவடியில் சோதனை முடிந்து, மீண்டும் பஸ்ஸில் ஏறி, அமர்ந்து, கண்ணயரத் திரும்பவும் அடுத்த சோதனைச் சாவடி.

சீ என்று வெறுத்துப் போகின்றது இரவுப் பயணங்கள். இவ்வளவும் வடக்கிலிருந்து கண்டி வீதியில் தரை வழியாக பஸ்களில், கார்களில் போகும் வடக்குப் பயணிகளுக்குத்தான்.

வடக்கும், தெற்கும் இடையில் தினசரி தவறாது இடம்பெறு ரயில் சேவைகளில் இந்தக் கெடுபிடி இருப்பதாகத் தெரியவில்லை. ரயில் பயணிகளிடம் ஓடும் ரயிலிலேயே உடைமைச் சோதனையை நடத்த முடியும். ஆனால் அப்படிச் சோதனை ரயிலில் நடப்பதாகத் தெரியவில்லை.

போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பதற்காகத்தான் இத்தகைய வழிமறிப்பும் சோதனையும் என்ற விளக்கம் வேறு அரசுத் தரப்பிலிருந்து. அதுதான் அதிகம் எரிச்சல் தருகின்றது.

போதைப் பொருளைக் கண்டுபிடிப்பதற்கான தேடுதல்கள், நிரந்தர வழிமறிப்புச் சோதனைகள் எவையும் வடக்கு மாகாணத்திற்கு வெளியில் இவ்வளவு தூரம் நடப்பனவாகத் தெரியவில்லை.

அதனால் இவ்விடயத்தை ஒட்டி சில கேள்விகள் வடக்குத் தமிழ் மக்கள் மனதில் எழுகின்றன.

இந்தத் தேடுதல் மார்க்கத்தை நோக்கினால் ஏதோ போதைப் பொருள்கள் எல்லாம் வடக்கில் மட்டும்தான் தயாராகி, விளைந்து, தென்னிலங்கைக்கும் பிற இடங்களுக்கும் போகின்றன, அவற்றை இடையில் வழி மறித்துச் சோதனையிட்டுக் கண்டுபிடிக்கிறோம் என்ற அர்த்தம்தான் வெளிப்படுகின்றது.

வடக்கிலிருந்து போகும் வாகனங்கள்தாம் பிய்த்து உதறப்படுகின்றன. வடக்கிற்கு வரும் வாகனங்கள் அல்ல.

இப்படி வடக்கிலிருந்து தெற்கே வரும் வாகனங்கள் மட்டுமே வழி மறித்து நோண்டப்படுவதால் சில விடயங்கள் சுட்டிக் காட்டப்பட வேண்டியவையாக உள்ளன.

வடக்கில் எந்தப் போதைப்பொருளும் உற்பத்தியாகுவதில்லை. கஞ்சா மட்டும் கேரளா போன்ற இடங்களில் இருந்து கடல் வழியாகக் கடத்தி வரப்படுவதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

ஹஸ்கிஷ், ஹெரோயின், ஐஸ் போன்ற ஆபத்தான போதைப் பொருள்கள் நாட்டுக்குள் வரும் மார்க்கம் வடக்குக் கடல் பகுதியல்ல. அதற்குத் தெற்குத் துறைமுகங்களும், பிற வெளிநாட்டு வருகைத் தளங்களும்தான் நுணுக்கமாகக் கண்காணிக்கப்பட வேண்டும்.

கேரளக் கஞ்சாக் கடத்தலைத் தடுப்பதற்கு கடலிலும், கடற்கரையோரங்களிலும்தான் சோதனை, கண்காணிப்புத் தீவிரமாக்கப்பட வேண்டுமே தவிர, ஏ9 பாதையில் வன்னிக் காட்டில் அல்ல.

அப்படி வன்னிப் பகுதியில் – நடு வீதியில் – வழி மறிப்புச் சோதனை நடத்துவதும், அதன் நோக்கம் போதைப்பொருள் கடத்தலைக் கண்டு பிடித்தலும் என்றால், கடத்தப்படும் கஞ்சா வடக்குக்குள் சுற்றுவட்டத்தில் பாவனைக்கு விடப்படுவதில் அதிகாரத் தரப்புக்கு ஆட்சேபனை இல்லை என்ற அர்த்தத்தையே அது தந்து நிற்கின்றது.

ஆகவே, இந்த வழிமறிப்பு சோதனை, அது நடத்தப்படும் விதம் ஆகியவை வேறு ஏதோ ஓர் உள்நோக்கத்தைக் கொண்டவை என்ற சந்தேகத்தையே தமிழர் தரப்புக்குத் தந்து நிற்கின்றன.

யுத்தம் முடிந்து பத்தாண்டுகள் கழிந்த பின்னரும் தமிழர் தாயகத்தில் இராணுவக் கெடுபிடியும், இராணுவப் பிரசன்னமும் குறைக்கப்படவில்லை. ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை.

எல்லா விடயங்களிலும் படையினரின் பிடி அரூபக்கரங்களாக நீண்டிருப்பது இங்கு உணரப்பட்டிருக்கின்றது.

அந்தப் பின்னணியில், இந்தத் திடீர் கெடுபிடி வழிமறிப்பும், நோண்டியெடுக்கும் சோதனைகளும் தமிழர்களின் வாழ்நிலையைப் பாதித்து நிற்கின்றன என்பது கண்கூடு.

# விக்கி கூட்டணி அமைத்தமையால் கவலையடையும் ராதாகிருஷ்ணன்



கொழும்பு, பெப். 11

வடக்கு – கிழக்கு மற்றும் மலையகக் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழர்களாகச் செயற்படவேண்டிய இந்தக் காலகட்டத்தில் வடக்கில் பிரிந்து செயற்படுவது வருத்தத்திற்குரியது என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டம் கொத்மலைப் பிரதேசத்தில் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இன்று நாட்டில் ஏதோ ஒரு வகையில் இனத்துவம் தலை விரித்து ஆடுகின்றது. ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறுகள் அதனை நமக்கு கோடிட்டுக் காட்டியுள்ளது. இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் உட்பட சிறுபான்மை மக்களாகிய நாங்கள் ஒன்றுணைந்து செயற்படவேண்டும். இந்நிலையில் வடக்கின் முன்னாள் முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் புதிய கட்சியாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணியை உருவாக்கி இருக்கின்றார். இது வடக்கில் தமிழ் மக்களிடையே பிரச்சினையை ஏற்படுத்தும். தற்போது வட கிழக்கில் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகும் நிலை உள்ள நிலையில் ஒன்றுபட்டு செயற்படவேண்டும். அதற்கான கால அவகாசமும் உண்டு. தமிழர்களின் ஒற்றுமை ஓங்கி நிற்க வேண்டும் – என்றார்.

# வடக்கில் புதிய அதிபர்களுக்கு நேற்று நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம், பெப். 11

வடக்கு மாகாண அதிபர் சேவை தரம் ஒன்றுக்கான நியமனங்களை வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

வடக்கு மாகாண அதிபர்களுக்கான நியமனங்களை வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம்.சாள்ஸ் நேற்று வழங்கினார்.

நியமனம் வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாண சேர்ந்த 80 ஆசிரியர்கள், அதிபர் தரம் மூன்றுக்கு நியமிக்கப்பட்டு அதற்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர் –

தற்போது வடக்கின் கல்வி நிலை பெரும் பிரச்சினைகளைக் கொண்டதாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. அதனைச் சரியாக கட்டியெழுப்புவதற்கு அதிபர்களாக அனைவரும் பாடசாலையிலிருந்து சரியான ஒழுக்கங்களை மாணவர்களுக்கு வழங்கவேண்டுமென இதன்போது கேட்டுக்கொண்டார்.

கையூட்டு பெறுவது, துஷ்பிரயோகங்களில்



ஈடுபடுதல், பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள் போன்றவற்றை ஒழிப்பதற்கும் அதற்கு கடுமையான சட்டங்களை வழங்குவதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது – என்றார்.

இந்த நியமனம் வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். சத்தியசீலன், வடக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ஐ)

## வாகனங்கள் கொள்வனவு விவகாரம்; கோட்டாவிடம் ஜே.வி.பி. கோரிக்கை

கொழும்பு, பெப். 11

கடந்த அரசின் காலத்தில் அமைச்சர்களுக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பிலான விசாரணைகளைக் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதியிடம் மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

2015 – 2020 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் எவ்வளவு வாகனங்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் பயன்பாட்டுக்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ளன மற்றும் அதற்காகச் செலவிடப்பட்டுள்ள நிதி தொடர்பாகக் கடந்த நாடாளுமன்ற அமர்வில் மக்கள் விடுதலை முன்னணி கேள்வியெழுப்பியிருந்தது. இந்த விடயம் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த அரசின் காலத்தில் வாகனக் கொள்வனவுக்காகப் பாரிய அளவில் நிதி செலவழிக்கப்பட்டுள்ளது. தேவைக்கு அதிகமாக எதற்காக இவ்வளவு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்பது தொடர்பில் விசாரணைகள் செய்யப்படவேண்டும் எனவும் அவர் கோரினார்.

இந்த விடயத்தை குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு ஒப்படைக்க ஜனாதிபதி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் நளிந்த ஜயதிஸ்ஸ கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## கணவனைத் தேடியபோது மாட்டிக்கொண்ட மனைவி

திருமலை, பெப். 11

இரகசியத் தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது திருகோணமலை விளாங்குளம் பகுதியில் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் விளாங்குளம், கண்டி வீதி, உப்பு வெளி எனும் முகவரியை சேர்ந்த 46 வயதுடைய பெண் எனத் தெரியவருகிறது.

இந்தப் பெண்ணின் வீட்டில் வைத்து 120 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. பெண்ணின் கணவன் ஹெரோய்ன் விற்பனை செய்து வருகிறார் எனப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது மனைவியிடமிருந்த போதைப்பொருளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

## நாளை

12.02.2020 – புதன்கிழமை

நட்சத்திரம்: திருதியை காலை 07.17 வரை
திதி : துதியை மு.ப. 09.36 வரை
இராகுகாலம் : 12.34 – 02.04
சுப நேரம் : 05.04 – 06.34

## பகிடிவதையால் வெளியேறிய மாணவருக்கு அரசு அழைப்பு

கொழும்பு, பெப். 11

பகிடிவதை காரணமாக பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறிய மாணவர்கள், மீண்டும் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டுள்ளது.

இந்த நடவடிக்கை தொடர்பாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவினால் நியமிக்கப்பட்ட பகிடிவதை குறித்து ஆராயும் குழுவே மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குழு தமது அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பெரும்பாலான மாணவர்கள், பகிடிவதை காரணமாக தமது பல்கலைக்கழகக் கல்வியை இடையிலேயே நிறுத்திவிட்டு சென்றுள்ளனர். இந்நிலையிலேயே அந்த மாணவர்கள் அனைவரும் மீண்டும் தங்களது கல்வியை தொடருவதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ள ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாடியில் இருந்து விழுந்து மாலைதீவு சிறுவன் படுகாயம்

கொழும்பு நகரில் உள்ள தொடர்மாடி கட்டமொன்றின் இரண்டாம் மாடியில் இருந்து விழுந்து மாலைதீவைச் சேர்ந்த 03 வயது சிறுவன் காயமடைந்துள்ளான் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் கொழும்பில் உள்ள மாலைதீவுகள் தூதரகம் ஆகியவற்றை மேற்கோள் காட்டி அந்த நாட்டு இணையதளமொன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் சிறுவன் அனுமதிக்கப்பட்டுள்ளான் எனக் கூறப்படுகின்றது.

# தேவையற்ற தலையீடு செய்யாதீர்!

### அதிகாரிகளுக்கு கோட்டா கடும் உத்தரவு



கொழும்பு, பெப். 11

அரச விவகாரங்கள், திட்டங்கள் அல்லது பிற நிதி பரிவர்த்தனைகளில் பிரதமர் அல்லது அமைச்சர்கள் சார்பில் பிரதமரின் தனிப்பட்ட செயலாளர்கள் அல்லது பிற அமைச்சர்களின் மக்கள் தொடர்பு அதிகாரிகள் மற்றும் பிற தனிப்பட்ட உத்தியோகத்தர்கள் தலையீடு செய்வதை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி தொலைபேசி மூலமோ கடிதம் மூலமோ யாருக்கும் ஆணைகளை வழங்க முற்படக்கூடாதெனவும் அவர் கடும் பணிப்புரை விடுத்துள்ளார்.

அனைத்துச் செயலாளர்களுக்கும் அமைச்சகங்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் மூலம் இது தொடர்பில் ஒரு சுற்றறிக்கை விடப்பட்டுள்ளது.

அவ்வாறான விடயங்களின்போது எதாவது தகவல் பரிமாறப்பட்டவேண்டுமாயின் பிரதமர், அமைச்சின் செயலாளர் மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளர்களுக்கு மட்டுமே அனுப்ப முடியும் என்று ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

கடந்தகாலங்களில் இருந்த அனைத்து அரசாங்கங்களின் பிரதமர்கள் மற்றும் அமைச்சர்களின் தனிப்பட்ட ஊழியர்களால் அரசின் மீது நேரடி மற்றும் மறைமுக அழுத்தம் வழங்கும் பல நிகழ்வுகள் இருந்தமையை கவனத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சிக்கினார் ஐஸ் வியாபாரி!

மட்டக்களப்பு, பெப். 11

மட்டக்களப்பு – வாழைச்சேனைப் பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் மற்றும் கஞ்சா விற்பனை செய்யும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவரிடம் இருந்து 50 கிராம் கேரளக் கஞ்சா மற்றும் 20 கிராமும் 75 மில்லி கிராமும் உடைய ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மாவட்ட புலனாய்வுப் பிரிவினர் கஞ்சா வியாபாரியின் வீட்டைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர். இதன்போது, மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருள்களைக் கைப்பற்றியதோடு வியாபாரியையும் கைது செய்தனர். (ஐ)

## மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.11

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

வராத்துப்பளை, புனிதநகர், கற்கோவளம், தும்பளை, வெளச்சவீடு, முதலாம் குறுக்குத்தெரு, 2 ஆம் குறுக்குத்தெரு, 3ஆம் குறுக்குத்தெரு, ஜெயந்தா கைத்தொழிற்சாலை பிறைவேற் லிமிற்ரெட், கற்கோவளம் ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில்-**

மதவுவைத்தகுளம் கிராமம், சாம்பல்தோட்டம், இலுப்பைக்குளம், நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார்ப்பிரதேசத்தில் -**

பாப்பாமோட்டை, மினுக்கன், நெடுங்கண்டல் மொபிட்டல் கோபுரம், மூன்றாம்பிட்டியிலிருந்து பள்ளமடு வரை, பள்ளமடு shrimp Farm ஆகிய பிரதேசங்களிலும் மின்தடை இருக்கும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## ஆப்கான் நிதியமைச்சர் கோட்டாவுடன் சந்திப்பு



கொழும்பு, பெப். 11

ஆப்கானிஸ்தான் நிதியமைச்சர் மொஹமட் ஹூமையோன் கையோமிக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் மற்றும் பிராந்திய பிரச்சினைகள் குறித்து இருவரும் கலந்துரையாடினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தில் இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவர் எம்.அஷ்ரப் ஹைதரியும் கலந்து கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## காசி, சாரநாத்தில் மஹிந்த வழிபாடு!

புதுடில்லி, பெப். 11

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் காலை உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள வாரணாசி நகருக்கு சென்றிருந்தார்.

லால் பகதூர் சாஸ்திரி சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்த பிரதமரை வரவேற்க விசேட வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வாரணாசி சென்ற பிரதமர் மஹிந்த, புனித கங்கை நதியின் மேற்கு கரையில் அமைந்துள்ள காசி விஸ்வநாதர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசி பெற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் நேற்று முன்தினம் மாலை நாராநாத் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார். (ஐ)





SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

காலைக்கதிர் Kalaikathir



# ஜார்கண்டில் காந்தி சிலை உடைப்பு



ராஞ்சி, பெப்.11

ஜார்கண்டில் காந்தி சிலையை சமூக விரோதிகள் சிலர் உடைத்து சேதப்படுத்தினர்.

ஜார்கண்ட் மாநிலத்தில் கும்கர் டோலி என்ற இடத்தில் காந்தி சிலை ஒன்று உள்ளது. இந்தச் சிலையை ஞாயிறு நள்ளிரவில் சமூக விரோதிகள் சிலர் உடைத்து சேதப்படுத்தினர். நேற்றுக் காலை இதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்த அப்பகுதி மக்கள் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் பொலிஸார் அங்கு சென்று விசாரணை நடத்தினர். விசாரணையில், நள்ளிரவில் சமூக விரோதிகள் சிலர் சுத்தியலால் காந்தி சிலையை உடைத்தமை தெரியவந்தது.

இதையடுத்து உடனடியாக அந்தச் சிலை சீரமைக்கப்பட்டது. பொலிஸார் வழக்குப்பதிவு செய்து காந்தி சிலையை உடைத்த சமூக விரோதிகளைத் தேடி வருகின்றனர்.

# அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகிறது



புதுடெல்லி,பெப்.11

இந்தியாவின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாறு திரைப்படத்தின் 'பர்ஸ்ட் லுக் போஸ்டரை' டெல்லியில் மத்திய மந்திரி பிரகாஷ் ஜவடேகர் வெளியிட்டார்.

தெலுங்கில் தயாராகும் இந்தப்படம் தமிழ், இந்தி, மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் வெளியாக உள்ளது. அப்துல் கலாம் வேடத்தில் தெலுங்கு நகைச்சுவை நடிகர், அலி பாா நடிக்க இருக்கிறார். இந்த ஆண்டின் இறுதியில் திரைப்படம் வெளியாகும் எனப் படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

இந்நிகழ்ச்சியின் படங்களை தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துகொண்ட மத்திய மந்திரி பிரகாஷ் ஜவடேகர் அதில் கூறியுள்ளவை வருமாறு:-

இந்தியாவின் சின்னமான மக்கள் ஜனாதிபதி டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் வாழ்க்கை வரலாற்றின் ஃபஸ்ர்ட் லுக் போஸ்டர் புதுடெல்லியில் இன்று (நேற்று) வெளியிடப்பட்டது.

Hollywood மற்றும் தெலுங்கு திரைப்படத்துறை இணைந்து தயாரிக்கும் இப்படம் 'APJ Abdul Kalam: The Missile Man' (ஏபிஜே அப்துல் கலாம்: ஏவுகணை நாயகன்) இந்த ஆண்டு இறுதியில் வெளியாக உள்ளது.

இத்திரைப்படத்தில் பிரபல தென்னிந்திய நடிகர் அலி பாா முன்னாள் ஜனாதிபதியின் பாத்திரத்தை ஏற்று நடிக்கிறார். இப்படத்தை ஜகதீஷ் தானேட்டி, சுவர்ணா பப்பு மற்றும் மார்டினி பிலிம்ஸ் நிறுவனத்தின் ஜானி மார்டின் ஆகியோர் இணைந்து தயாரிக்கின்றனர்.

இதுமட்டுமின்றி, 'சத்ரபதி சிவாஜி மகாராஜ்' மற்றும் 'முதல் இந்திய சுதந்திரப் போர்' குறித்த திரைப்படங்கள் உள்ளிட்ட 5 திரைப்படத் தயாரிப்புகளை அமெரிக்காவை தளமாகக் கொண்ட மார்டினி பிலிம்ஸ் மற்றும் பிங்க் ஜாகுவார்ஸ் என்டர்டெயின்மென்ட் மற்றும் பிற பனர்களுடன் இணைந்து தயாரிக்க உள்ளன. இதற்காக அவர்கள் நூறு கோடி டொலருக்கும் அதிகமாக முதலீடு செய்கிறார்கள். - இவ்வாறு மத்திய மந்திரி பிரகாஷ் ஜவடேகர் தெரிவித்துள்ளார்.

# கொரோனோ வைரஸ் பாதிப்பை தடுக்க சீனாவுக்கு உதவுவதற்கு இந்தியா தயார்

## அந்நாட்டு அதிபருக்கு பிரதமர் மோடி கடிதம்

புதுடெல்லி,பெப்.11

கொரோனோ வைரஸ் பாதிப்பை தடுக்க சீனாவுக்கு இந்தியா உதவத் தயார் என சீன அதிபருக்கு பிரதமர் மோடி கடிதம் எழுதி உள்ளார்.

சீனாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. அதை கட்டுப்படுத்த முடியாமல் தவித்து வருகிறார்கள். இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது.

கொரோனோ வைரஸுக்கு இதுவரை 811 பேர் பலியாகி உள்ளனர். நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் 89 பேர் இந்த வைரஸால் உயிரிழந்துள்ளனர். ஹுபே

மாகாணத்தில் மட்டும் கொரோனாவால் 81 பேர் இறந்துள்ளனர்.

2,656 பேருக்கு புதிதாக இந்த நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. 37 ஆயிரத்து 198 பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பதாக சீனாவின் சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டை சேர்ந்த 19 பேர் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர் எனவும் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே சீனாவில் அமெரிக்க நாட்டை சேர்ந்தவர் கொரோனோ வைரஸுக்குப் பலியாகி இருந்தார். தற்போது ஜப்பானை சேர்ந்த ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

சீனாவை தவிர்த்து பிலிப்பைன்ஸ் மற்றும் ஹாங்காங்கில் தலா ஒருவர் கொரோனோ வைரசுக்கு பலியாகி உள்ளனர். இந்த வைரஸ் நோய் மேலும் பரவுவதை தடுப்பதற்காக சீனா



விலும் உலகில் பல்வேறு நாடுகளிலும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில், கொரோனா வைரஸ் பாதிப்பை தடுக்க இந்தியா உதவத் தயார் எனத் தெரிவித்து சீன அதிபர் ஜி ஜின்பிங்கிற்கு பிரதமர் மோடி கடிதம் எழுதி உள்ளார். மேலும் சீனாவின் ஹுபெய் நகரில் தவித்த இந்தியர்களை மீட்க உதவியதற்காக சீன அதிபருக்கு பிரதமர் மோடி பாராட்டும் தெரிவித்துள்ளார்.

# 2,000 ரூபா கள்ள நோட்டுகள் மும்பையில் வசமாகச் சிக்கின

## பாகிஸ்தானில் அச்சிடப்பட்டவையாம்

பாகிஸ்தானில் அச்சிடப்பட்ட சுமார் 24 லட்சம் ரூபாய் மதிப்புடைய 2 ஆயிரம் ரூபா கள்ள நோட்டுக்கள் மும்பையில் பறிமுதல் செய்யப்பட்டன.

மத்திய புலனாய்வு முகமை அளித்த தகவலின் பேரில், துபாயில் இருந்து விமானம் மூலம் வந்த ஜாவேத் கே் என்ற பயணி பேருந்து நிலையத்தில் காத்திருந்தபோது பொலிஸார் சோதனை நடத்தினர்.

அப்போது, சூட்கேஸில் கள்ள நோட்டுகளை ஜாவேத் கே் மறைத்து வைத்திருந்தமை தெரியவந்தது. அவற்றைப் பாகிஸ்தானில் இருந்து துபாய் கொண்டுவந்து அங்கிருந்து இந்தியாவுக்குக் கடத்தியமைச்சி ஜாவேத் ஒப்புக்கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் கண்டறியாத வகையில் கள்ள நோட்டில் 7 பாதுகாப்பு அம்சங்கள் கச்சிதமாக இருந்தன எனவும், சூட்கேஸின் உள்பகுதியின் விளிம்புகளில் மறைத்து வைத்திருந்ததால் நோட்டுகளை விமானநிலைய சோதனையின் போது கண்டுபிடிக்கமுடியிவில்லை என்றும் பொலிஸார் விளக்கம் அளித்தனர்.

# டெல்லியில் ஆட்சியமைக்கப்போவது யார்? இன்று வாக்கு எண்ணிக்கை; மதியம் முடிவு!

டெல்லி சட்டமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகளுடன் மின்னணு இயந்திரங்கள் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. இன்று காலை 8 மணி முதல் வாக்குகள் எண்ணப்படுகின்றன. பிற்பகலுக்குள் தேர்தல் முடிவுகள் வெளியாகும்.

வாக்குப்பதிவு சதவீதம் குறித்த அதிகாரப்பூர்வமான அறிவிப்பை தேர்தல் ஆணையம் தாமதம் செய்தது அதிர்ச்சியளிப்பதாக ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.



தேர்தல் முடிந்த 24 மணி நேரம் கழித்துதான் 62.59 சதவீதம் வாக்குகள் பதிவாகின எனத் தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்மாக அறிவித்தது.

தேர்தல் ஆணையம் என்ன செய்துக் கொண்டிருந்தது என்று கெஜ்ரிவால் கேள்வி எழுப்பியுள்ளார். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடு நடத்த சதி நடப்பதாகவும் அவர் தேர்தல் ஆணையத்திடம் புகார் அளித்துள்ளார்.

ஆயினும் தேர்தல் ஆணையம் கெஜ்ரிவாலின் புகாருக்கு மறுப்புத் தெரிவித்துள்ளது. இரவு நேரம் என்பதாலும் தேர்தல் நடத்திய அதிகாரிகள் காலை முதலே மிகவும் ஓய்வின்றி இருந்தனர் எனவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடு என்பது அடிப்படையற்றது என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.





# பத்தாயிரம் கோடி ரூபா பெறுமதியுடைய சொகுசுக் கப்பல் வாங்குகிறார் பில்கேட்ஸ்

மைக்ரோசாப்ட் நிறுவனரும் உலக பணக்காரர்கள் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளவருமான பில்கேட்ஸ், மிக பிரமாண்டமான சொகுசு கப்பல் ஒன்றை வாங்கியுள்ளார்.

உலகின் பெரும் செல்வந்தர்களில் ஒருவரான பில்கேட்ஸ், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் மற்றும் பாதிப்பு ஏற்படுத்தாத முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பது, உலகின் ஆரோக்கியத்தை மேம்படுத்த செயல்படும் நிறுவனங்களுக்கு உதவுவது உள்ளிட்ட செயல்களுக்காக தொடர்ந்து தனது பணத்தைத் தாராளமாகச் செலவிட்டு வருகிறார்.

சுற்றுசூழலை பாதுகாக்கும் வகையில் உருவாக்கப்படும் பசுமை சொகுசு கப்பல்களை வாங்குவதில் அதிக முதலீடு செய்து வருகிறார். இதன் பொருட்டு

பில்கேட்ஸ் இந்திய மதிப்பில் ரூ.4,600 கோடி (இலங்கை



நாணயத்தில் சுமார் பத்தாயிரம் கோடி ரூபா) மதிப்புடைய சூப்பர் கப்பல் ஒன்றை வாங்க சமீபத்தில் ஓடர் கொடுத்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பில்கேட்ஸ் மிகவும் விரும்பி வாங்கியுள்ளதாக கூறப்படும் பிரமாண்டமான சூப்பர் சொகுசு கப்பல், முற்றிலும் திரவ ஹைட்ரஜனால் இயங்கும் என தெரிகிறது. மேலும் இதில் பல அதிநவீன வசதிகள் இடம்பெற உள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சினோட் (Sinot) என்ற டச்சு நிறுவனதால் இந்த சொகுசு கப்பல் வடிவமைக்கப்பட்டு வருகிறது. இந்த கப்பல் 3,750 நாட்டிகல் மைல்கள் வரம்பில், 17 வஜலிமிவி டாப் ஸ்பீடில் இயங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்த கப்பலின் நீளம் 112 மீட்டர், அதாவது சுமார் 367 அடியாகும்.

எரிபொருள் கலங்களுக்கு மின் ஆற்றலை வழங்கும் திரவ ஹைட்ரஜனால் இந்த சொகுசு கப்பல் இயங்கும் என சினோட் நிறுவனம் கூறியுள்ளது. மேலும் பில்கேட்ஸ் வாங்கியுள்ள சொகுசு கப்பல் பற்றி கூறியுள்ள சினோட், தொழில்நுட்பத்தில் மட்டுமல்லாமல் அழகியல் சார்ந்தும் இந்த சொகுசு கப்பலை வடிவமைத்து வருகிறோம். தவிர முழுமையாக செயல்படும் திரவ ஹைட்ரஜன் மற்றும் எரிபொருள் கலங்களை செயல்படுத்துவதும் கூட எங்களுக்கு சவாலாக இருக்கும் என கூறியுள்ளது.

இந்த பிரமாண்டமான சொகுசு கப்பல்கள் 5 தளங்களை கொண்டது. இதில் 2 வி.ஐ.பி ஸ்டேரூம்கள், பிரமாண்டமான ஒரு உரிமையாளர் காட்சி அரங்கம், 14 இரட்டைக் குழு அறைகள், 2 அதிகாரி அறைகள் மற்றும் ஒரு கேப்டன் அறை ஆகியவை அடக்கம். மேலும் இந்த கப்பலில் ஒரு உடற்பயிற்சி கூடம், ஒரு ஹைட்ரோ - மசாஜ் அறை , யோகா ஸ்டுடியோ, நீச்சல் குளம் அடங்கிய சுகாதார மற்றும் ஆரோக்கிய மையம் அமைக்கப்படும்.

நீச்சல் குளம், ஹெலிபேட், ஸ்பா மற்றும் உட்புறக் குளம் உள்ளிட்ட பல அதிநவீன வசதிகளை பில்கேட்ஸின் இந்த புதிய சொகுசு கப்பல் கொண்டுள்ளது. மேலும் வட்ட வடிவமைப்பிலான அற்புத படிக்கட்டுகள் மேல் தளத்திலிருந்து கீழ் தளத்திற்குச் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

ஹைட்ரஜன் எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் பற்றாக்குறை காரணமாக படகில் டீசல் பேக்அப் இருக்கும் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. மேலும் பல்வேறு காரணங்களால் இந்த சொகுசு கப்பல் 2024 க்கு முன்னர் கடலுக்குச் செல்ல வாய்ப்பில்லை எனவும் கூறப்படுகிறது.




# பராமரிப்பில்லாத விமானங்களால் ரஷ்யாவில் தொடரும் விபத்துகள்

ரஷ்ய விமானம் ஒன்று கியரில் பழுது ஏற்பட்டதையடுத்து அவசரமாக தரையிறக்கப்பட்ட போது தரையுடன் மோதியது.

ஆயினும் அந்த விமானத்தில் இருந்த 94 பயணிகளும் 6 விமான ஊழியர்களும் அதிர்ஷ்டவசமாகக்காயமின்றிஉயிர்தப்பினர். போயிங் 737 என்ற அந்த விமானம் மொஸ்கோவை நோக்கி 100 பேருடன யுனிசிங்க் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட வேகத்தில் உடனே அவசரமாகத் தரையிறங்க அனுமதி கோரியது.

விமானத்தை தரையிறக்க முயன்ற போது அதன் பின்பக்கம் எதிர்பாராத விதமாக தரையுடன மோதியதில் விமானம் தரைதட்டி விழுந்தது. பயணிகள் யாருக்கும் பெரிய காயங்கள் இல்லாத போதும் விமானத்தில் இருந்து வெளியே வருவதற்கு அவர்கள் மிகவும் சிரமப்பட்டனர்.

## அமெ.தடையையும் மீறி அசத்துகின்றது ஈரான்

புதிய எண்ணெய் வயல்களைக் கண்டறிவதற்கும், இயற்கைப் பேரிடர்களை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்குமான புதிய செயற்கைக்கோளை விண்ணுக்கு நந்வுவதற்கான 'கவுண்ட் டவுனை' ஈரான் தொடங்கியுள்ளது.

113 கிலோ எடை கொண்ட ஸாபர் என்று பெயரிடப்பட்ட இந்த செயற்கைக் கோளை சிர்மோர்க் றொக்கெட் மூலம் ஏவுவதற்கான கவுண்ட் டவுன் நேற்று முன்தினன் தொடங்கியது. இந்தச் செயற்கைக் கோள் மூலம் நிலத்திற்கு கீழ் இருக்கும் எண்ணெய்ப் படிமங்களைக் கண்டுபிடிக்கவும், பூகம்பம் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளவும் முடியும் என்றும் ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ராட் 500 என்ற குறுகிய தூர ஏவுகணையையும் ஈரான் சோதனை செய்துள்ளது.

200 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இலக்குகளை குறிதவறாமல் தாக்கும் வல்லமை கொண்டது இந்த ஏவுகணை என ஈரான் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா விதித்துள்ள கடுமையான பொருளாதாரத் தடையையும் மீறி ஈரான் செயற்கைக்கோள் மற்றும் ஏவுகணையை ஏவுகின்றமை உலக நாடுகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

## வீடு தீப்பற்றி எரிந்ததில் தாய், 6 பிள்ளைகள் பலி

### அமெ. மிசிசிப்பியில் பரிதாபம்

அமெரிக்காவில் வீடொன்று திடீரெனத் தீப்பற்றி எரிந்ததில் தாய் மற்றும் சிறுவர்களான அவரது 6 பிள்ளைகள் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

மிசிசிப்பி மாகாணம் கிளின்டன் நகரை சேர்ந்த 33 வயதான ஆசிரியர் பிரிட்டானி பிரெஸ்லி அவரது கணவர் மற்றும் 6 குழந்தைகளுடன் தூங்கிக்கொண்டிருந்தபோது சனிக்கிழமை இரவு திடீரென வீடு தீப்பற்றி எரிந்தது.

சிறிது நேரத்தில் முழு வீடும் தீப்பற்றி எரிந்ததால் அங்கிருந்து வெளியேற முடியாமல் பெண் மற்றும் 6 சிறுவர்களும் தீயில் கருகி இறந்தனர்.

பிரிட்டானி பிரெஸ்லியின் கணவர் மட்டும் பலத்த தீக்காயங்களுடன் உயிர் தப்பினார். அவர் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தீபத்துக்கான காரணம் குறித்து மிசிசிப்பி மாகாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# கொரோனா வைரஸ் பரவலைச் சமாளிக்க தாதியர்களுக்குப் பதிலாக ரோபோக்கள்

பீஜிங்,பெப்.11

சீனாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருவதால், அங்குள்ள மருத்துவமனைகளில் தாதியர்களுக்குப் பதிலாக ரோபோக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.



சீனாவில் கொரோனா வைரஸ் அசுர வேகத்தில் பரவி வருகிறது. வைரஸ் பாதிப்பு மற்றும் உயிரிழப்பு நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்கிறது. வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை அங்கு 811 பேர் பலியாகியுள்ளனர். 37 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு உள்ளனர். வைரஸ் தாக்குதலால் மருத்துவமனைகளில்கூட்டம்நிரம்பிவழிகிறது.

பல்வேறு மருத்துவமனைகளில் நோயாளிகளை அனுமதிக்க இடம் இல்லாத சூழல் நிலவுகிறது. ஏற்கனவே 1,000 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை உகான் நகரில் 10 நாள்களுக்குள் சீன அரசு கட்டி முடித்து உள்ளது. மேலும், மருத்துவமனைகளை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

மருத்துவமனைகளில் டாக்டர்கள், தாதிகள் மற்றும் ஊழியர்கள் விடுப்பின்றி பணியாற்றி வருகிறார்கள். கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத்தில், குடும்பத்தினரை பிரிந்து பணியாற்றும் அவர்கள் வைரஸ் தொற்றால் பாதிக்கப்படும் நிலை உள்ளது.

இதனால் அவர்களை வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாப்பதற்காக மருத்துவமனைகளில் தாதிகளுக்குப் பதில் ரோபோக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. நோயாளிகளுக்கு மருந்து, மாத்திரை, உணவுகளை தாதியர் வழங்குவதற்குப் பதிலாக ரோபோக்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இந்த நடவடிக்கையை பலரும் பாராட்டி வருகிறார்கள்.

# ‘சுதந்திர தினத்தன்று’ நாட்டில் காணப்பட்ட இரு வேறு காட்சிகள்!

நிலாந்தன்




இலங்கைத் தீவு அதன் 72ஆவது சுதந்திர தினம் என்ற நாளைக் கொண்டாடிய பொழுது நாடு இரண்டாகப் பிளவுண்டு காணப்பட்டது.

சிங்களப் பகுதிகளில் சிங்கக் கொடி பரவலாகப் பறந்தது. பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும் முச்சக்கர வண்டிகளிலும் கொடிகள் பறந்தன. கொழும்பு மாநகரில் பரவலாகக் கொடிகள் பறந்தன. தீவின் ஜனாதிபதி சிவில் உடையில் இராணுவப் பதக்கங்களை அணிந்து நிகழ்வில் பங்குபற்றினார். தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைப்பதற்கு அனுமதி இருக்கவில்லை.

இவ்வாறு சிங்கள மக்கள் தமது சுதந்திர தினம் என்று கூறப்படும் ஒரு நாளைக் கொண்டாடிய அதே நாளில் தமிழ் பகுதிகளில், குறிப்பாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் நிலைமை தலைகீழாகக் காணப்பட்டது.

அங்கே சுதந்திர நாளை ஒரு கரிநாளாக அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அரசு அலுவலகங்களில் சுதந்திர தினத்தைக் கொண்டாட வேண்டும் என்பது ஒரு கட்டாயச் சடங்கு. அது தவிர தமிழ் மக்கள் மத்தியில் அப்படி எந்தக் கொண்டாட்டமும் காணப்படவில்லை. தமிழ் மக்கள் அந்த நாளுக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லாதது போல காணப்பட்டார்கள்.

அந்நாளில் தமிழ் பகுதிகளில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்திருந்தார்கள். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கருதப்படும் கூட்டமைப்பு சுதந்திர தினக் கொண்டாட்டங்களைப் புறக்கணித்தது.

இவ்வாறாக சுதந்திர தினத்தன்று இலங்கை தீவில் இரண்டு முரணான காட்சிகள் காணப்பட்டன. தென்னிலங்கை, சுதந்திர தினம் என்று கூறப்படும் நாளை ஆரவாரமாகக் கொண்டாடியது. ஆனால் தமிழ் மக்களோ அந்த நாளுக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்பது போல நடந்து கொண்டார்கள்.

இத்தகைய பொருள்படக் கூறின் இலங்கைத் தீவு அதன் சுதந்திர தினம் என்று கூறிக்கொள்ளும் ஒரு நாளைக் கொண்டாடிய போது நாடு இரண்டாக பிளவுபட்டுபட்டுக் காட்சியளித்தது.

ஆனால் இந்தப் பிளவு ராஜபக்ஷக்களுக்கு ஒரு விதத்தில் இலாபகரமானது. அப்படியொரு பிளவை வெளிப்படையாகப் பேணுவதன் மூலம் அவர்கள் தமது வாக்கு வங்கியை மேலும் பெருக்கிக் கொள்கிறார்கள். அவர்களுடைய ஒரே குறிக்கோள் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் எப்படி ஆகக்கூடிய பெரும்பான்மையை பெறுவது என்பதுதான். ஏனெனில் அந்தப் பெரும்பான்மையைப் பெறுவதன் மூலம் அவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நெருங்கலாம் .




மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைத்தால் 19ஆவது திருத்தத்தை அகற்றலாம். அத்தோடு ரணில் விக்ரமசிங்க உருவாக்கியிருக்கும் நிலைமாறுகால நீதிக்குரிய கட்டமைப்புகள் என்று மேற்கு நாடுகளால் பார்க்கப்படும் மூன்று கட்டமைப்புக்களான காணாமல் போனவர்களுக்கான அலுவலகம், இழப்பீட்டு நீதிக்கான அலுவலகம், சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான கட்டமைப்பு ஆகிய கட்டமைப்புகளையும் அகற்றலாம்.

அதன்மூலம் நிலைமாறுகால நீதிக்கு எதிரான திட்டவட்டமான ஒரு நகர்வை முன்னெடுக்கலாம். இவற்றுக்கூடாக சிங்கள வெகுஜனங்களின் மத்தியில் இன அலை ஒன்றைக் கிளப்பி அதை வரவிருக்கும் தேர்தல்களில் வாக்குகளாக அறுவடை செய்யலாம். அதாவது வாக்கு வேட்டை அரசியலுக்காக அவர்கள் தனிச் சிங்கள வாக்குகளைக் குறிவைத்துத் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருகிறார்கள்.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிராகத் தெளிவாக, வெளிப்படையாக அவர்கள் நகர்வுகளை முன்னெடுத்து வருகிறார்கள். முஸ்லிம்களுக்கு தமது அமைச்சரவையில் இடம் கொடுக்காமல் விட்டது.ல், இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த மாட்டோம் என்று கூறுவது, ஐ.நா.வின் நிலைமாறுகால நீதிக்கான தீர்மானத்தை நிறைவேற்ற மாட்டோம் என்று கூறுவது போன்ற பல நடவடிக்கைகளின் மூலம் அவர்கள் தனிச் சிங்கள வாக்குகளைக் கவர முயற்சிக்கிறார்கள் .

இதில் முஸ்லிம்களுக்கு எதிரான நிலைப்பாட்டை அவர்கள் வருங்காலத்தில் மாற்றக்கூடும். ஆனால் இனப் பிரச்சினைக்கான தீர்வைப் பொறுத்தவரை கடந்த முப்பத்தி மூன்று ஆண்டுகாலப் பகுதிக்குள் உருவாக்கப்பட்ட இரண்டு தீர்வுகளையும் அவர்கள் முழுமையாக அமுல்படுத்த மாடோம் என்று கூறுகிறார்கள். பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த மாட்டோம் என்று கூறுவது இந்திய, இலங்கை உடன்படிக்கைக்கு எதிரானது. நிலைமாறுகால நீதியை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கூறுவது ஐ.நா. தீர்மானத்துக்கு எதிரானது.

இந்திய – இலங்கை உடன்படிக்கை எனப்படுவது 33 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் தலையீட்டினால் இனப் பிரச்சினை தீர்வுக்கு என்று கூறி எழுதப்பட்ட ஓர் உடன்படிக்கை. தமிழ் இயக்கங்களின் ஆயுதப் போராட்டத்தின் விளைவாகக் கிடைத்த ஒரு தீர்வே மாகாணசபைகள் ஆகும்.

தமிழ் இயக்கங்கள், குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் கேட்டது தனிநாடு. ஆனால் கிடைத்தது சமஷ்டி என்ற பெயரில் அரைகுறைத் தீர்வு. அதுதான் மாகாண சபை. அந்த மாகாண சபையையும் உடன்படிக்கையில் உள்ளபடி தரமாட்டோம் என ராஜபக்ஷக்கள் கூறுகிறார்கள்.

ஐ.நா. தீர்மானம் அல்லது நிலைமாறுகால நீதி எனப்படுவது இனப் பிரச்சினைக்குத் தீர்வாகப் போருக்குப் பின்னரான இலங்கைத் தீவுக்கு உலக சமூகம் வழங்கிய ஒரு தீர்வு. தமிழ் மக்களில் பெரும் பகுதியினர் கேட்டது இனப் படுகொலைக்கு எதிரான பரிகார நீதியை. ஆனால் ஐ.நா. வழங்கியதோ நிலை மாறுகால நீதியை. அந்த அரைகுறைத் தீர்வையும் அமுல்படுத்த மாட்டோம் என்று ராஜபக்ஷகள் கூறுகிறார்கள்.

அவர்கள் தேர்தல் வெற்றிக்காக அப்படிக் கூறுகிறார்கள் என்று எடுத்துக்கொண்டாலும் கூட இலங்கைத் தீவின் தேர்தல் கள யதார்த்தத்தைப் பொறுத்தவரை சிங்களத் தலைவர்கள் பண்டாரநாயக்காவின் காலத்திலிருந்து எந்த இனவாதத்திற்குத் தலைமை தாங்கி தேர்தல்களில் வெற்றி பெறுகிறார்களோ அதே இனவாதத்தின் கைதிகள் ஆகிவிடுகிறார்கள். இது ராஜபக்ஷக்களுக்கும் பொருந்தும்.

அப்படி என்றால் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக கடந்த 32 ஆண்டுகளில் வழங்கப்பட்ட இரண்டு தீர்வுகளையும் முழுமையாக நிறைவேற்ற மாட்டோம் என்று ராஜபக்ஷக்கள் கூறுகிறார்கள். இனப் படுகொலைக்குப் பின்னரான ஓர் அரசியலில் அவர்கள் அவ்வாறு கூறுகிறார்கள். அவ்வாறு கூறத் தேவையான துணிச்சல் அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது?

அதற்கு உலக சமூகம் பதில் சொல்ல வேண்டும். தாங்கள் வழங்கிய இரண்டு தீர்வுகளையும் நிராகரித்து, அதன்மூலம் இன அலை ஒன்றைத் தோற்றுவித்து, தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ராஜபக்ஷக்கள் முயற்சிப்பதற்கு முதலாவதாக உலக சமூகம் பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ் மக்களுக்குத் தான் வழங்கிய நீதியை ஏற்றுக் கொள்ள மறுக்கும் ராஜபக்ஷக்களை ஐ.நா. என்ன செய்யப் போகிறது? ஐ.நா. தீர்மானத்தை எதிர்ப்பதன் மூலம் நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்ஷக்கள் வாக்குகளைத் திரட்டுவதை ஐ.நாவால் தடுக்க முடியுமா?

அடுத்ததாக தமிழ் கட்சித் தலைவர்களும் அதற்குப் பொறுப்பு. தமிழ் கட்சித் தலைவர்கள் கடந்த பத்தாண்டுகளில் தமிழ் தரப்பின் பேரத்தை கூர்மையான விதங்களில் மேலுயர்த்தத் தவறிவிட்டார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போதும் அதற்கு வாய்ப்பு கிடைத்தது. ஆனால் தமிழ் மக்களின் ஆணை, அதுவும் மிகப் பலமான ஓர் ஆணை இடம்மாறி வழங்கப்பட்டு விட்டது.

அதைத்தான் ராஜபக்ஷக்கள் தமக்குச் சாதகமாக வியாக்கியானம் செய்கிறார்கள். உண்மையில் அந்த தமிழ் மக்கள் ஆணை சஜித்துக்கு ஆதரவானது அல்ல. ராஜபக்ஷக்களுக்கு எதிரான அந்த மக்கள் ஆணையானது தமிழ் தேசத்துக்கான ஒரு மக்கள் ஆணையாக வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதாவது ஒரு தமிழ் பொது வேட்பாளருக்கு அது வழங்கப்பட்டு இருந்திருந்தால் இச்சிறிய தீவில் இரண்டு தேசங்கள் உண்டு என்ற செய்தி கூர்மையாக வெளிவந்திருக்கும். ஆனால் கூட்டமைப்பு அந்த வாய்ப்பைப் பாழாக்கியது. ஏனைய கட்சிகளும் அதற்குப் பொறுப்பு.

அனைத்துலக சமூகம் நான் வழங்கிய அரைகுறை நீதியான நிலைமாறுகால நீதியைக் காப்பாற்ற முடியவில்லை. இந்திய அரசாங்கத்தாலும் 33 ஆண்டுகளுக்கு முன் தான் உருவாக்கிய மாகாண சபைகளை முழுமையாக அமுல்படுத்த முடியவில்லை.

இவ்வாறு தமிழின எதிர்ப்பு, முஸ்லிம் எதிர்ப்பு போன்றவற்றுக்குத் தலைமை தாங்குவது மூலம் ராஜபக்ஷக்கள் தமது தேர்தல் வெற்றிகளை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ள முற்படுகிறார்கள். அதாவது அவர்கள் ஓர் இன அலையை எழுப்பி தமது வாக்கு வங்கியை ஒன்று திரட்ட முயற்சிக்கிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் நிலைமை எவ்வாறு இருக்கிறது?

கடந்த செவ்வாய்க்கிழமை சுதந்திர தினம் அன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒழுங்குபடுத்திய இரண்டு எதிர்ப்பு நடவடிக்கைகளும் தமிழ் மக்கள் ஒரு திரளாக இல்லை என்பதைத் தான் காட்டுகின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவ காரத்தில் கூட தமிழ் தரப்பு ஒற்றுமைப்பட முடியவில்லை.

அன்றைக்கு கிளிநொச்சியில் கூட்டமைப்பினரின் தலைமையில் நடந்த எதிர்ப்பு நடவடிக்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பங்குபற்றியிருக்கிறார்கள்.

ஆனால் அந்த எதிர்ப்பு நடவடிக்கையில் பங்குபற்றிய மக்களின் மொத்த தொகையைவிட அதிகரித்த தொகையினர் மற்றொரு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைமை தாங்கியிருக்கிறது. அதில் ஓர் ஆர்ப்பாடத்தில் ஈடுபட்டவர்கள் ‘காசுக்காக போராட மாட்டோம் என்று குரல் எழுப்பினார்கள்’ அப்படியென்றால் யார் காசு கொடுப்பது? யார் காசு வாங்குவது? யாரை யார் இயக்குவது?

இறுதிக்கட்டப் போரில் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு சிறிய தமிழ் பட்டினத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக இரண்டு எதிர்ப்பு நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இது எதைக் காட்டுகிறது?

தமிழ் மக்கள் தங்களுக்குரிய நீதியைப் பெறும் பொருட்டு ஒரு பெரும் திரளாக மேலெழுவதற்கு இன்னும் காத்திருக்க வேண்டியிருக்கிறது என்பதைத் தானா?

நாடு இன ரீதியாக இரண்டாகக் காணப்பட்ட ஒரு நாளில் தமிழ் மக்களும் இரண்டாக அல்லது அதைவிட பல துண்டுகளாக சிதறிக் கிடக்கிறார்கள் என்பதையா?

நன்றி: ஆதவன் இணையம்

# இந்திய அரசின் உதவி இல்லாமல் புலிகளை வென்றிருக்க முடியாது!

## மனம் திறக்கிறார் பிரதமர் மஹிந்த

புதுடில்லி, பெப். 11

இந்தியாவின் உதவி இல்லாமல் கிடை க்காமல் – போயிருந்தால், விடுதலைப் புலிகளுடனான போரில் நாங்கள் வெற்றி பெற்றிருக்க முடியாது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' நாளேட்டுக்கு மஹிந்த ராஜபக்ஷ அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாங்கள் பயங்கரவாதத்துக்கு எதிரானவர்கள். எனவே இந்தியா, பாகிஸ்தானுடன் இது தொடர்பாக விவாதிக்கிறோம். இந்தியாவும் பாகிஸ்தானும் இலங்கையின் 30 ஆண்டுகால உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உதவி உள்ளன. எங்களுக்கு ஆயுதங்களையும் விமானங்களையும் பாகிஸ்தான் அளித்தது.

இவ்வளவு ஏன்? இந்தியாவின் உதவி மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் நாங்கள் வெற்றி பெற்றிருப்போம் என நினைக்கவில்லை. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இந்தியா இலங்கைக்கு உதவி செய்தது. ஆனால் அதை நாங்கள் பகிரங்கப்படுத்தவில்லை.

இலங்கையில் இஸ்லாமிய பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளார் என இந்தியா முன்னரே எச்சரிக்கை விடுத்தது. ஆனால் அப்போது இலங்கையில் இருந்த அரசு இதை கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டது. இது தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருகிறோம். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் இந்தியாவின் உள்விவகாரங்களில் ஒருபோதும் தலையிடமாட்டோம்.



எங்களுடன் நட்பாக இருக்கும் நாடுகளுக்கு ஒவ்வொரு பார்வை இருக்கலாம். ஆனால் இந்திய விவகாரங்களில் தலையிடுவதில்லை என்பது எங்கள் நிலைப்பாடு. ஏனெனில் இந்தியா எங்களது உறவு நாடு; மற்றையவை நட்பு நாடுகள். இதை நான் பல முறை குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறேன். யுத்தத்தால் இலங்கை மிக மோசமாக பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டது.

ஆகையால் நாட்டைப் பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்பவேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கின்றது. இதற்குச் சீனா உதவ முன்வரும் போது அதை நாங்கள் தவிர்க்க முடியாது. இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் நாங்கள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முயற்சிக்கிறோம். இதற்காகவே நிதியையும் ஒதுக்கி இருக்கிறோம்.

ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போன்ற தமிழர் அரசியல் கட்சிகள் வளர்ச்சியை விரும்பவில்லை. அதிகாரப் பகிர்வு இனப்பிரச்சினைக்கு தீர்வு என்றே அவர்கள் பேசி வருகின்றனர் – என்றார்.

## 30 ஆண்டுகளுக்குப் பின்னர் தேரேறிய மாம்பிராய் வைரவர்



யாழ்ப்பாணம், பெப். 11

முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் காங்கேசன்துறை, மாம்பிராய் ஞானவைரவர் ஆலயத்தில் நேற்று முன்தினம் தேர்த் திருவிழா கோலாகலமாக இடம்பெற்றது.

1990ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னர், 28 ஆண்டுகளாக உயர் பாதுகாப்பு வலயமாக இந்தக் கோயில் அமைந்துள்ள பகுதி காணப்பட்டது.

2018 ஆம் ஆண்டு மக்களின் மீள் குடியேற்றத்திற்காக இப்பகுதி விடுவிக்கப் பட்டிருந்தது. இதன்போது மாம்பிராய் ஞானவைரவர் ஆலயம் இடித்து அழிக்கப் பட்டுருந்தது. அழிக்கப்பட்ட ஆலயத்தை அப்பகுதி மக்கள் தமது சொந்த முயற்சியில், புலம் பெயர் நாடுகளில் வாழ்ந்து வரும் அப்பகுதி மக்களது நிதிப்பங்களிப்பில் புதுப் பொலிவுடன் கட்டிமுடித்துள்ளனர்.

கடந்த 29ஆம் திகதி எண்ணெய்க் காப்பு சார்த்தி 30 ஆம் திகதி கொடியேற்றத் திருவிழா ஆரம்பமானது. 11 ஆம் நாளான நேற்று முன்தினம் தேர்த்திருவிழா மிகக் கோலாகலமாகக் இடம்பெற்றது. (ஐ)

## ரிஷாத்தின் ரகசிய ஆவணங்கள் மன்னாரில் தேடுதலில் சிக்கின!

மன்னார், பெப்.11

குற்றவியல் விசாரணைத் திணைக்களத்துக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மன்னாரில் உள்ள முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டை நேற்று முன் தினம் சோதனையிட்ட பொலிஸார் பல்வேறு இரகசிய ஆவணங்களைக் கைப்பற்றியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆவணங்களில் மன்னார் பிரதேசத்தில் கொள்வனவு செய்த காணிகள், வீடு உட்பட பல சொத்துக்கள் அடங்கிய ஆவணங்கள் அடங்குகின்றன எனக் கூறப்படுகின்றது.

தவிர ரிஷாத் பதியுதீன் அமைச்சராகப் பதவி வகித்த போது சதோச நிறுவனத்தின் ஊடாக மேற்கொண்ட வர்த்தகம் தொடர்பாக தகவல்கள் அடங்கிய ஆவணங்களும் இதில் இருக்கின்றன எனப் பேசப் படுகிறது. (ஐ)

## எம்மைத் திருடர்கள் என்று எவரும் இனி கூறமுடியாது

### ரவி கருணாநாயக்க சொல்கிறார்



கொழும்பு, பெப். 11

மத்திய வங்கியின் பிணை முறி விவகாரம் தொடர்பான தடயவியல் அறிக்கை இறைவனால் கொடுக்கப்பட்ட ஒன்றாகும். இப்போது எம்மைத் திருடர்கள் என்று எவரும் கூறமுடியாதென முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட ரவி கருணாநாயக்க, பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த ஐந்து ஆண்டுகளில் நான் எந்த வாகனங்களையும் இறக்குமதி செய்யவில்லை. அதை நான் பொறுப்புடன் கூறிக்கொள்ள முடியும்.

அத்துடன் கடந்த அரசில் நிதி, வெளிவிவகார மற்றும் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சராக இருந்தேன். ஆனால் நான் எந்த வகையான வாகன இறக்குமதியிலும் பங்கேற்கவில்லை.

இருப்பினும் நான் வாகனங்களை இறக்குமதி செய்துள்ளேன் என்று சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஏன் இவ்வாறு பொய்யான தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றது என்று எனக்குத் தெரியவில்லை.

எனவே இதுபோன்ற பொய்களை வெளியிட்டுள்ள ஊடகங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரச்சினை இருப்பதாக ஊடகங்கள் பாசாங்கு செய்துள்ளன. இருப்பினும், எங்கள் கட்சிக்குள் எந்த உள் பிரச்சினையும் இல்லை.

அதனால்தான் ரணில், கரு, சஜித், ரவி ஆகிய நாம் அனைவரும் இந்த பொய்யான பிரசாரங்களைத் தடுத்து கட்சியின் பலத்தைக் மேலோங்க செய்ய முயற்சிக்கிறோம்.

கட்சியின் தலைவர்களில் 90 சதவீதம் பேர் இணைந்து செயற்படுகிறார்கள். எனவே அடுத்த வாரத்துக்குள், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஒரு வலுவான ஒருமித்த கருத்தை உருவாக்க நாங்கள் தயாராக உள்ளோம்.

இதேவேளை இந்த அரசு ஆட்சிக்கு வந்து 80 நாள்கள் கடந்து விட்டன. இருப்பினும், அத்தியாவசியப்பொருள்களின்விலைகள்குறைக்கப்படவில்லை. இந்த அரசு மக்களை ஏமாற்றி ஆட்சிபீடம் ஏறியுள்ளது.

அத்துடன் ஏப்ரல் 25 க்குள் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தச் சூழலில், அனைவரும் ஒன்றுபட்டு நாட்டைப் பற்றி சிந்திக்கவேண்டும். அனைத்து அரசியல் பிளவுகளையும் மறந்து தெளிவான முடிவை எடுக்க வேண்டும்.

மத்திய வங்கியின் பிணை முறி விவகாரம் தொடர்பான தடயவியல் அறிக்கை நாம் திருடர் இல்லை என்பதை தற்போது தெளிவுப்படுத்தியுள்ளது. உண்மையான திருடர்கள் மத்திய வங்கியில் இருந்த போது, நாம் கை காட்டினோம் – என்றார். (ஐ)

## யாழ்.மாநகரசபை முன்னாள் மேயர் விசுவநாதன் ஆஸியில் காலமானார்



யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வரும், பிரபல சட்டத்தரணியும், யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமாகிய ராஜா விசுவநாதன் நேற்று ஆஸ்திரேலியாவின், சிட்னி நகரில் தனது 94ஆவது வயதில் காலமானார்.

1979 முதல் 1983 வரை யாழ்பாணத்தின் மாநகர முதல்வராக கடமையாற்றிய ராஜா விசுவநாதன், தமிழர்களின் உரிமைகளுக்காக பல்வேறு அரசியல் தளங்களில் முன்னின்று உழைத்தமையுடன் பல்வேறு சமூகச் செயற்பாட்டுகளிலும் ஈடுபட்டுள்ளார்.

ராஜா விசுவநாதன், நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரனின் தந்தையார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)





# முதன்முறையாக சர்வதேசத் தொடரில் கிண்ணத்தை வென்றது பங்களாதேஷ்!

ஜூனியர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தியாவை வீழ்த்தி பங்களாதேஷ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளது. இந்தப் போட்டியில், பங்களாதேஷ் அணி 3 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் சர்வதேச கிரிக்கெட் தொடர் ஒன்றில் முதன்முறையாக கிண்ணத்தை வென்று பங்களாதேஷ் அணி சாதனை படைத்துள்ளது.

19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 13ஆவது தொடர் கடந்த மாதம் 17ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகியது.

மொத்தம் 16 அணிகள் பங்கேற்ற இந்த கிரிக்கெட் தொடரில் லீக் மற்றும் நொக் – அவுட் சுற்றுகளின் முடிவில் ஆசிய அணிகளான நடப்பு சம்பியன் இந்தியாவும் பங்களாதேஷும் இறுதிப்போட்டிக்கு முன்னேறின.

இந்நிலையில், போட்செப்ஸ்ட்ரூமில் நேற்றுமுன்தினம் இறுதி போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

அந்தவகையில் முதலில் களமிறங்கிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் யாஸ்வி ஜைஸ்வால் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர், ஒரு சிக்ஸர், எட்டு பௌண்டரிகள் அடங்கலாக 88 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

அத்துடன், திலக் வர்மா 38 ஓட்டங்களையும், துருவ் ஜுரல் 22 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர். ஏனையோர் பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் அடுத்தடுத்து ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இதன்படி இந்திய அணி 47.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக, அவிகே் தாஸ் 3 விக்கெட்டுகளையும், ஷொரிபுல் இஸ்லாம் மற்றும் தன்ஸிம் ஹசன் சகிப் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றியதோடு ரஹிபுல் ஹசன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

இந்நிலையில், பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹொசைன் இமொன் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஏழு பௌண்டரிகள் அடங்கலாக 47 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் தன்ஷிட் ஹசன் 17 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டார். ஏனைய வீரர்கள் சோபிக்காத நிலையில் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இந்நிலையில் போட்டியின் இறுதி வேளையில் மழை குறுக்கிட்டதால் போட்டி இடைநிறுத்தப்பட்டு பங்களாதேஷ் அணிக்கு 46 ஓவர்களில் 170 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதையடுத்து பங்களாதேஷ் அணி 42.1 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு வெற்றியிலக்கை அடைந்தது. இதன்மூலம் 3 விக்கெட்டுகளால் பங்களாதேஷ் அணி வெற்றிவாகை சூடியது.

இந்தப் போட்டியில் அணித்தலைவர் அக்பர் அலி ஆட்டமிழக்காமல் ஒரு சிக்ஸர் 4 பௌண்டரிகள் அடங்கலாக 43 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டமையுடன் ரகிபுல் ஹசன் ஆட்டமிழக்காமல் 9 ஓட்டங்களுடன் களத்தில் நின்றார்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக நிதான ஆட்டத்தை இறுதி நேரத்தில் வெளிப்படுத்தி போட்டியை வெற்றிப்பாதைக்குக் கொண்டுசென்ற அணித்தலைவர் அக்பர் அலி தெரிவுசெய்யப்பட்டார்.

# ரிக்கி பொண்டிங் அணி மயிரிழையில் வெற்றி!

புஷ்பையர் கிரிக்கெட் பாஷ் கண்காட்சிப் போட்டியில் ரிக்கி பொண்டிங் தலைமையிலான அணி கில்கிறிஸ்ட் லெவன் அணியை ஓர் ஓட்டத்தால் வீழ்த்தியுள்ளது.

ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட காட்டுத்தீயால் ஏராளமான இழப்புகள் ஏற்பட்டன. அதற்கு நிவாரணம் திரட்ட கண்காட்சி கிரிக்கெட் போட்டியை நடத்தத் திட்டமிடப்பட்டது. இதற்கு புஷ்பையர் கிரிக்கெட் பாஷ் என பெயரிடப்பட்டது.

இதன்படி, பொண்டிங் லெவன் மற்றும் கில்கிறிஸ்ட் லெவன் ஆகிய அணிகள் தயாராகின. இந்தப் போட்டி மெல்போர்னில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கில்கிறிஸ்ட் லெவன் அணி பந்து வீச்சில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதற்கமைய பொண்டிங் லெவன் அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. ஜஸ்டின் லாங்கர், மத்தியு ஹெய்டன் ஆகியோர் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். லாங்கர் 6 ஓட்டங்களிலும், ஹெய்டன் 16 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அதன் பின் வந்த ரிக்கி பொண்டிங் 14 பந்தில் 26 ஓட்டங்கள் சேர்த்தார்.

லாரா 11 பந்தில் 3 பவுண்டரி, 2 சிக்சருடன் 30 ஓட்டங்கள் எடுத்து ரிட்டையர்டு ஹர்ட் மூலம் வெளியேறினார். இறுதியில் ஹோட்ஜ் 4 பந்தில் 11 ஓட்டங்கள் அடிக்க 10 ஓவரில் ரிக்கி பாண்டிங் லெவன் அணி 5 விக்கெட் இழப்பிற்கு 104 ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்நிலையில், கில்கிறிஸ்ட் லெவன் அணி 105 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கியது. இதில் கில்கிறிஸ்ட் 11 பந்தில் 17 ஓட்டங்கள் அடித்து ஆட்டமிழந்தார். ஷேன் வொட்சன் 9 பந்தில் 2 பவுண்டரி, 3 சிக்சருடன் 30 ஓட்டங்கள் எடுத்து ரிட்டையர்டு ஹர்ட் மூலம் வெளியேறினார்.




அடுத்துவந்தஹோட்ஜ் ஓட்டமெதுவும் பெறாமலும் யுவராஜ் சிங் 20 ஓட்டங்களுடனும்விலானி ஓட்டங்களுடனும் வெளியேறினர். சிம்மன்ஸ் அதிரடியாக விளையாடி 13 பந்தில் 29 ஓட்டங்கள் சேர்த்தார்.

கில்கிறிஸ்ட் அணிக்கு இறுதி ஓவரில் 17 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ஆனால் 15 ஓட்டங்களையே எடுத்தது. இதனால் ரிக்கி பொண்டிங் லெவன் அணி ஓர் ஓட்டம் வித்தியாசத்தில் வெற்றியை சுவீகரித்தது.

# சச்சித்ர சேனநாயக்க ஓய்வு

இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான சச்சித்ர சேனநாயக்க சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகிறார் என அறிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமாகி இலங்கை அணிக்காக ஒரேயொரு டெஸ்ட் போட்டியில் விளையாடியுள்ள சச்சித்ர சேனநாயக்க, இதுவரை 49 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 53 விக்கெட்டுக்களையும், 24 ரி20 போட்டிகளில் விளையாடி 25 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார்.

34 வயதான இவர், கடந்த 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஆஸ்ரேலிய அணிக்கு எதிராக கொழும்பில் நடைபெற்ற ரி20 போட்டியில் இறுதியாக இலங்கை அணிக்காக விளையாடியிருந்தார்.

சர்வதேசப் போட்டிகளில் கடந்த 3 வருடங்களாக விளையாடாத அவர், கொழும்பு எஸ்.எஸ்.சி. அணிக்காக விளையாடி வந்தமையுடன், கடந்த பருவகாலத்தில் அந்த அணியின் தலைவராகவும் செயற்பட்டிருந்தார்.

அத்துடன், 2018/2019 பருவகாலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட போட்டித் தொடரில் சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் சிறந்த சகலதுறை வீரருக்கான விருதுகளையும் இவர் பெற்றுக்கொண்டார்.

2012ஆம் ஆண்டு ஐ.சி.சியின் விதிமுறைகளுக்கு முரணாக முறையற்ற விதத்தில் பந்துவீசுவதாக சச்சித்ர சேனநாயக்க குற்றம்சுமத்தப்பட்டார்.




எனினும், அந்த தடையிலிருந்து அவர் மீண்டும் திரும்பி இலங்கை அணிக்காக விளையாடியிருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

அத்துடன், 2014 இல் இலங்கை அணி ஐ.சி.சியின் ரி20 உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு முக்கிய காரணமாக இருந்த வீரர்களில் சச்சித்ர சேனநாயக்கவுக்கு முக்கிய இடமுண்டு.

இதேநேரம், 2014 இல் இங்கிலாந்துடன் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் ஜோஸ் பட்லரை மேன்கட் முறையில்வீழ்த்தி சச்சித்ர சேனநாயக்க சர்ச்சையை ஏற்படுத்தியருந்தார்.

எனினும், அந்தப்போட்டியில் இலங்கை அணி வெற்றியீட்டியது. சர்வதேச ரீதியாக ஒருசில டி20 லீக் போட்டிகளில் விளையாடியுள்ள அவர், 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், தனது ஓய்வு முடிவு குறித்து சச்சித்ர சேனநாயக்க வெளியிட்ட விசேட அறிக்கையில், அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறவுள்ளார் எனவும் இதற்கான அறிவிப்பை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# மார்ச் 2இல் சபை கலைக்கப்பட்டு ஏப்ரல் 25 இல் பொதுத் தேர்தல்

## எஸ்.பி. திஸாநாயக்க அறிவிப்பு

கொழும்பு, பெப். 11

நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைப்பதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்காத பட்சத்தில், ஏற்கனவே திட்டமிட்ட அடிப்படையில் மார்ச் 2ஆம் திகதி அது கலைக்கப்பட்டு ஏப்ரல் 25 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்று இராஜாங்க அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

முன்கூட்டியே நாடாளுமன்றத்தைக் கலைத்து – தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தும் அரசின் யோசனைக்கு ஆதரவு வழங்கமாட்டோம் என எதிர்க்கட்சித் தலைவர் அறிவித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொத்மலையில் நேற்று இடம்பெற்ற நடமாடும் சேவை நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத்தை வெகு விரைவில் கலைத்து தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தும் யோசனை அரச தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவு அவசியமாகும். இதன்படி எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கினால் புத்தாண்டுக்கு முன்னர் தேர்தலை நடத்தலாம்.

இதற்கு சஜித் தரப்பு ஆதரவை வழங்காவிட்டாலும் எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. ஏனெனில் திட்டமிட்ட அடிப்படையில் மார்ச் 2ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு ஏப்ரல் 25 ஆம் திகதி பொதுத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும் – என்றார்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின்போது இடம்பெற்றுள்ள சர்ச்சைக்குரிய வாகன இறக்குமதி தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

நான் வாகனம் கொள்வனவு செய்யவில்லை. அமைச்சில் இருந்த வாகனத்தையே பாவனைக்கு எடுத்துள்ளேன். வாகனம் வாங்குவதற்கு கையொப்பமிடு, இல்லையேல் பதவி விலகு என அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்தார் என ஊடகத்துறை அமைச்சின் செயலாளராக இருந்த போபகே அறிவித்துள்ளார்.

இவ்வாறுதான் எவ்வித திட்டமிடலும் இல்லாமல், கையில் நிதி இல்லாதபோதிலும், நாலா புறங்களிலும் கடன்பட்டாவது வாகனங்களைக் கொள்வனவு செய்துள்ளனர். அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்களுக்கு மட்டுமல்ல, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சொகுசு வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தனது இருப்பை தக்க வைத்துக்கொள்வதற்காகவே ரணில் இவ்வாறு செய்துள்ளார். ஆனால், அன்று இருந்ததைவிடவும் இன்று அவருக்குக் கட்சிக்குள் எதிர்ப்புகள் வலுத்துள்ளன. ஏனெனில் அவரின் பிறவிப் பலன் அப்படி அமைந்துள்ளது – என்றார். (ஐ)

# மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண ஆணையகத்தை அமைப்பது அவசியம்

## இந்தியாவில் டக்ளஸ் வலியுறுத்தல்

புதுடில்லி, பெப். 11

இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினைகளைத் தீர்க்க, பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடாப் பகுதிகளில் கூட்டு கடல்சார் மீன்வள மேலாண்மை ஆணையகத்தை அமைக்கவேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இந்தியா சென்றுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழக ஊடகமான தினத்தந்திக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவிக்கையில் –

கடல்சார் சுற்றுச்சூழலுக்குச் சேதம் விளைவிப்பதை மிகவும் உணர்வுபூர்வமாக பார்க்கவேண்டும்.

தென்னிந்தியாவையும் இலங்கையின் வடக்கு மாகாண பகுதியையும் பிரிக்கும் பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடாப் பகுதியில் பல்வேறு தனித்துவமிக்க கடல் வளங்கள் காணப்படுகின்றன.

ஆனால் தற்போது அந்த பகுதியில் கடல்சார் சுற்றுச்சூழலுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ள நிலையில் இலங்கையின் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் ஊடுருவி மீன்பிடிப்பது இலங்கை வடக்கு மாகாண பகுதியிலுள்ள தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தை கடுமையாக பாதித்துள்ளது.

போர் நடந்தபோது இலங்கையின் வடக்கு மாகாண பகுதியில் உள்ள தமிழ் மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை.

போர் நிறைவடைந்த பின்னர், ஒரு வருடத்துக்கு பிறகுதான் அவர்கள் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். ஆனால் இந்திய மீனவர்கள் இராட்சத படகுகள் மற்றும் ரெட்டை மடி வலைகள் மூலம் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய மீன்களை சுருட்டிக்கொண்டு செல்வதோடு, வலைகளையும் சேதப்படுத்துகின்றனர் என இலங்கை தமிழ் மீனவர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இதனால் இலங்கைத் தமிழ் மீனவர்கள் கோபம் அடைந்து, இந்திய மீனவர்களையும் அவர்களுடைய படகுகளையும் தாக்குகிறார்கள். மீனவர்களுக்கு இடையே



ஏற்படும் மோதலை இலங்கை கடற்படை தடுக்கிறது.

வெளிநாட்டு மீன்பிடி படகுகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான மீன்வள திருத்த சட்டம் 2018 அமுல்படுத்துவதற்கு முன்பு, 138 இந்திய மீன்பிடி படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இவை இலங்கை துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை இந்தியக் கடலோர காவற்படை, இலங்கையை சேர்ந்த 34 மீன்பிடி படகுகளை பிடித்துள்ளது. அவற்றை விடுவிக்கவேண்டும்.

அத்துடன் அதிக பணம் ஈட்டுவதற்காக மீனவர்கள் போதைப்பொருள் கடத்தும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. இதை 2 நாடுகளும் இணைந்து தடுக்கவேண்டும். மீனவர்களின் படகுகளை பயன்படுத்திக் கடல் எல்லையைப் பயங்கரவாதிகள் கடந்து செல்வது வளர்ந்து வரும் அச்சுறுத்தல் ஆகும்.

மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடா கூட்டு கடல்சார் மீன்வள மேலாண்மை ஆணையம் அமைக்க வேண்டும். இந்த ஆணையத்தில் 2 நாடுகளை சேர்ந்த மீன்வளத்துறையை சேர்ந்த உயர் அதிகாரிகள், இலங்கை வடக்கு மாகாணம் மற்றும் தமிழகத்தை சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகள் உட்பட 2 நாடுகளில் இருந்தும் தலா 7 உறுப்பினர்கள் இடம்பெறவேண்டும்.

ஆழ்கடல் மீன்பிடி படகுகளை பெறுவதிலும் தேவையான நிதி மற்றும் தளபாட ஆதரவை வழங்குவதிலும் இந்திய மீனவர்களுக்கு மோடியின் உத்தரவாதம் உதவிகரமாக இருக்கும் – என்றார்.

# இரண்டு தடவைகள் இடம்பெற்ற நேர்முகத் தோவுகளிலும் ஊழலா?

## வடக்கு சுகாதார தொண்டர்கள் கேள்வி

யாழ்ப்பாணம், பெப். 11

வடக்கு மாகாணத்தில் உள்ள சுகாதாரத் தொண்டர்களை நியமிப்பதில் கடந்த ஆண்டு இரண்டு தடவைகள் நேர்முகத்தேர்வு இடம்பெற்றும் நியமனம் வழங்கப்படவில்லை எனவும் இரண்டு தடவைகள் இடம்பெற்ற நேர்முகத் தேர்வுகளிலும் ஊழல் இடம்பெற்றுள்ளதா எனவும் வடக்கு சுகாதாரத் தொண்டர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வடக்கில் உள்ள வைத்தியசாலைகளில் நீண்ட காலம் தொண்டர்களாகப் பணியாற்றிய சுமார் 909 பேர்களுக்கும் கடந்த வருடம் மே மாதம் 27ஆம், 28 ஆம் திகதிகளில் நேர்முகத் தேர்வு இடம்பெற்றது.

இதன்போது 452 சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான நியமனம் சாவகச்சேரியில் வைத்து வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்த நேர்முகத் தேர்வில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்து நூற்றுக் கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தமையோடு, ஒருவர் தற்கொலை முயற்சியிலும் ஈடுப்பட்டார். இதனையடுத்து இந்த நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டன. இந்த நியமனங்களை இரத்துச் செய்து புதிதாக நேர்முகத் தேர்வை நடத்திச் சரியானவர்களைத் தெரிவு செய்யுமாறு அப்போதைய ஆளுநர் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் மீண்டும் சுகாதார தொண்டர்களுக்கான நேர்முகத் தேர்வு கடந்த வருடம் செம்ரெம்பர் 27,28, 29 ஆம் திகதிகளில் இடம்பெற்றது. இதன்போது 386 பேர் நிரந்தர நியமனத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். புள்ளி அடிப்படையில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களும் வடக்கு சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அப்போது ஜனாதிபதித் தேர்தல் காலம் என்பதனால் தேர்தல் முடிய கடமைகளைப் பொறுப்பேற்குமாறு நியமனம் கடிதம் பெற்றவர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால் இதன் பின்னரும் நியமனம் கிடைக்காத ஏனைய சுகாதாரத் தொண்டர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுப்பட்டனர்.

இதனால் இரண்டாவது நேர்முகத் தேர்விலும் தெரிவு செய்யப்பட்டு நியமனம் கடிதம் வழங்கியவர்கள் நியமனமும் இரத்துச் செய்யப்பட்டது. காரணம் தேர்வில் முறைகேடுகள் இடம்பெற்றுக எனச் சொல்லப்பட்டது.

ஆனால் இரண்டு நேர்முகத் தேர்வுகளையும் ஆளுநரின் பணிப்புக்குமைய வடக்கு மாகாணத்தில் உள்ள அனுபவம் வாய்ந்த நிர்வாகத்தர உயரதிகாரிகளும், மருத்துவத் துறையில் அனுபவம் பெற்றவர்களும் நடத்தியிருந்தனர்.

இந்த இரண்டு தடவைகளும் இவர்களால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் முறைகேடுகள், ஊழல்கள் என்றால் இவர்களை ஏன் தொடர்ந்தும் அந்தந்த உயர் பதவிகளில் வைத்திருக்கின்றீர்கள் எனக்கேள்வி எழுப்பும் இரண்டாவது தடவையாக இடம்பெற்ற நேர்முகத்தேர்வில் நியமனம் பெற்ற சுகாதாரத் தொண்டர்கள், 909 பேர் சுகாதாரத் தொண்டர்கள் எனக் கூறிக்கொண்டிருக்கின்ற நிலையில் அதில் அரைவாசிப் பேருக்கு நியமனம் வழங்கும்போது நியமனம் கிடைக்காதவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாது என்றும், எனவே இதனை காரணமாக வைத்து தங்களின் நியமனத்தை இழுத்தடிக்கவேண்டாம் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ)

# சு.கவை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும் மொட்டு!



கொழும்பு, பெப். 11

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு எதிராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் சொற்போர் தொடுத்துவருகின்றனர்.

எனினும், இதற்குப் பதிலடி எதுவும் கொடுக்காமல் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் மௌனம் காத்துவருகின்றனர்.

குறிப்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசியல் கூட்டணியில் இணைத்தலைமை பதவியை மைத்திரிக்கு வழங்கமுடியாது என்றும்,

பொதுத்தேர்தலில் அக்கட்சி உறுப்பினர்களுக்கு 30 வீத ஆசன ஒதுக்கீட்டை வழங்க முடியாது எனவும் மொட்டு கட்சிக்காரர்கள் இடித்துரைத்துவருகின்றனர்.

2019 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேசக்கரம் நீட்டிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டது.

இதன்படி ஜனாதிபதி தேர்தலில் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கும்,பொதுத்தேர்தலின்போது கதிரை சின்னத்தில் களமிறங்குவதற்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

அத்துடன் கூட்டணியில் மைத்திரிக்கு உயர் பதவியொன்றை வழங்குவதற்கும் பச்சைக் கொடி காட்டப்பட்டிருந்தது.

எனினும், ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்த பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஓரங்கட்டும் வகையிலேயே மொட்டுக்கட்சிக்காரர்களின் நடவடிக்கைகள் அமைந்தன.

தற்போது நாடாளுமன்றத் தேர்தல நெருங்கும்வேளையில் 'மொட்டு' சின்னத்திலேயே போட்டியிடுவோம். அதனை விட்டுக்கொடுக்க முடியாது என அறிவித்துவருகின்றனர். இதனால் சுதந்திரக்கட்சிக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தங்களுக்கு மக்கள் செல்வாக்கு இருக்கின்றது என கூறும் சுதந்திரக்கட்சி பொதுத்தேர்தலில் தனித்து போட்டியிட்டு அந்தப் பலத்தை காட்ட வேண்டும். அதன் பின்னர் எங்களுடன் கூட்டணி அமைக்கலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத் தெரிவித்தார்.

அதேபோல் பொலன்னறுவை மாவட்டத்தில் சுதந்திரக்கட்சிக்கு இடமளிக்கமாட்டோம். அக்கட்சியினர் தனித்து போட்டியிட்டால் நாடு முழுவதும் நான்கு ஆசனங்களைக்கூட கைப்பற்றமுடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் ரணசிங்க குறிப்பிட்டார்.

அதேவேளை, மொட்டுதான் வெற்றி நிச்சயம். அதனை எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்கமாட்டோம். சின்னத்தை ஏற்க மறுப்பவர்கள் தனித்து போட்டியிடலாம் எனவும் ராஜபக்ஷ அணியினர் வலியுறுத்திவருகின்றனர். (ஐ)

# புத்தாண்டுக்கு முன் தேர்தலா? சஜித் பிரேமதாஸ போர்க்கொடி



கொழும்பு, பெப். 11

நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைத்து பொதுத்தேர்தலை நடத்தும் யோசனைக்கு ஒருபோதும் ஆதரவளிக்கமாட்டோம். – என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளதுடன், மக்களின் வாழ்க்கைச் செலவும் உச்சம் தொட்டுள்ளது. இந் நிலைமை தொடர்ந்தால் ஆட்சிக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்பதாலேயே முன்கூட்டியே தேர்தலை நடத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்துவதற்கு அரசு முயற்சித்துவருகின்றது எனவும், இதற்கு ரணில் தரப்பும் பச்சைக்கொடி காட்டியுள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமர் மஹிந்த தலைமையில் அண்மையில் நடைபெற்ற ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்திலும் இது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

அத்துடன், ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டு எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதியன்று ஓராண்டு பூர்த்தியாகின்றது. இந் நிலையில் ஏப்ரல் இறுதி வாரத்தில் பொதுத்தேர்தல் நடத்தப்படுமானால் அது ஏதேனும் ஒரு விதத்தில் தமது கட்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்பதால் ஏப்ரல் முதல் வாரத்தில் தேர்தலை நடத்துவதற்கு ரணில் தரப்பும் பச்சைக்கொடி காட்டியுள்ளது என தெரியவருகின்றது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின்பிரகாரம் நான்கரை ஆண்டுகளுக்கு பின்னரே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு இருக்கின்றது.

எனினும், நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் தீர்மானமொன்றை நிறைவேற்றினால் முன்கூட்டியே கலைக்க முடியும் என்றும், இதன்பிரகாரம் அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படலாம் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ –

நான்தான் எதிர்க்கட்சித் தலைவர். எமது தரப்பு எவருடனும் 'டீல்' பேசவில்லை. எனவே, குறித்தொதுக்கப்பட்ட காலப்பகுதியில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

பொருளாதார நெருக்கடியை முகாமை செய்யமுடியாமல் அரசு திண்டாடுவதுடன், புத்தாண்டுக்கு மக்களுக்கு நிவாரணங்களை வழங்கமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்நிலை தொடர்ந்தால் மக்கள் அதிருப்தியடைவார்கள் என்பதாலேயே மார்ச் 2ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

அவ்வாறு செய்வதாக இருந்தால் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பானமை அவசியம். அதற்கான ஒத்துழைப்பை ஐக்கிய தேசிய முன்னணி வழங்காது. – என்றார் சஜித்.


கிருபா லேணர்ஸ்

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550

கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்

★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி

வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# தமிழரசுவின் மன்னார் மாவட்ட வேட்பாளராக மீண்டும் சார்ள்ஸ்

தமிழரசுவின் மன்னார் மாவட்ட வேட்பாளராக மீண்டும் சார்ள்ஸ்



மன்னார், பெப். 11

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனை மீண்டும் போட்டியிட வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட செயற்குழு கூட்டம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜாட்சன், நானாட்டான் பிரதேச சபையின் தலைவர் திருச்செல்வம் பரஞ்சோதி, தமிழரசுக் கட்சியின் மாவட்ட இளைஞர் அணி தலைவர் சட்டத்தரணி எஸ்.டினேஸன் மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் கிளைக் குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. மேலும் இவ்வருடம் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழரசுக் கட்சியின் சார்பாக மன்னார் மாவட்டத்தில் மீண்டும் போட்டியிட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனை நியமிப்பது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கட்சிக்கு எதிராகச் செயற்பட்டவர்களிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்புவது, கிராம மட்டங்களில் மக்கள் சந்திப்புக்களைத் தொடர்ச்சியாக மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் மன்னார் பிரதேச சபையில் இடம்பெற்று வரும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக மன்னார் பிரதேச சபை உறுப்பினரினால் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது. (ஐ)

## வீட்டின் முன்பாக இருந்த மாதா சொரூபம் மாயம்



வவுனியா,பெப்.11

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வீதியில் வைக்கப்பட்டிருந்த மாதா சொரூபம் மாயமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா சாந்தசோலை உபவீதி பூந்தோட்டம் பகுதியில் வீட்டின் வாயிலில் வைக்கப்பட்டிருந்த மாதா சொரூபமே விசமிகளால் நேற்று உடைக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் அனைத்துச் சமூகத்தினரும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் நிலையில், இந்தச் செயற்பாடானது குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு முறைப்பாடளித்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வீட்டின் உரிமையாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

## காணாமற்போனவர்கள் தொடர்பாக மதிப்பாய்வு செய்யவுள்ளது ஐ.நா. குழு

கொழும்பு, பெப். 11

இலங்கை உட்பட 32 நாடுகளில் உள்ள வலிந்து காணாமற்போனவர்கள் தொடர்பான 530 க்கும் மேற்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்காக ஐ.நா. சபையின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான செயற்குழு இம்மாதம் 10 முதல் 14 ஆம் திகதி வரை ஜெனீவாவில் தனது 120 ஆவது அமர்வை நடத்துகின்றது.

வலுக்கட்டாயமாக காணாமற்போனவர்களின் உறவினர்கள், அரச அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்து தனிப்பட்ட மற்றும் வலிந்து காணாமற்போனவர்களின் தொடர்ச்சியான நடைமுறை பற்றிய தகவல்களை இந்த குழுவில் உள்ள 5 நிபுணர்கள் கேட்டறிந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் வலுக்கட்டாயமாக காணாமற்போவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான பிரகடனத்தை அமுல்படுத்துவதில் ஏற்பட்ட தடைகள், சட்டம் மற்றும் நடைமுறைகள் அல்லது வலிந்து காணாமற்போன வழக்குகளைத் தீர்ப்பதில் ஏற்பட்ட தோல்விகள் குறித்து நிபுணர்கள் ஆராய்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இந்தச் செயற்குழு, தனது 40 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பொதுக்கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. இதனை அடுத்து அன்றைய தினமே பகல் 1 மணிக்கு விசேட செய்தியாளர் சந்திப்பும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து இடம்பெறும் செயற்குழுவின் மீதமுள்ள அமர்வு தனிப்பட்ட முறையில் நடைபெறுகின்றது. மேலும் இந்த செயற்குழுவில் ஆர்ஜென்ரீனா, கொரியா, மொராக்கோ, லிதுவேனியா மற்றும் கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஐந்து சுயாதீன நிபுணர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 100,000 அரச தொழில்களில் மோசடி

கொழும்பு, பெப். 11

ஒரு லட்சம் அரச தொழில் வாய்ப்புகள் வழங்களில் மோசடிகள் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

அத்தோடு, மக்களை ஏமாற்றி ஆட்சியமைத்துள்ள அரசு, தொடர்ந்தும் அவர்களை ஏமாற்றி வருவதாகவும் அவர் சாடினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எட்டாம் தரம் வரையில் கல்விக் கற்று தொழிலின்றி இருக்கும் இளைஞர்கள் ஒரு லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதாக அரசு தெரிவித்துள்ளது.

இது பொதுத் தேர்தலை மையமாகக் கொண்டிருப்பதுடன், இதன்மூலம் அரசு பல சூழ்ச்சிகளையும் மேற்கொள்ள முயற்சிக்கின்றது.

அத்துடன் மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த அரசு, தனது ஆட்சியையும் மக்களையும் ஏமாற்றும் வகையிலே செயற்படுத்தி வருகின்றது.

தமது ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு எந்தவித சலுகைகளையும் பெற்றுக் கொடுக்க முடியாத அரசு பொதுத் தேர்தலின் பின்னர் எவ்வாறு பெற்றுக்கொடுக்கும். மக்களுக்கு இந்த விடயம் தொடர்பாக நாங்கள் எச்சரித்திருந்தபோதும் அவர்கள் அதற்கே ஆதரவளித்துள்ளார்கள் – என்றார். (ஐ)

## சட்டவிரோத சிகரெட்டு மீட்பு

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளனவென, திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, கிண்ணியா, அஹமட்லேன் வீதியிலுள்ள 58 வயது குடும்பஸ்தர் ஒருவரிடமிருந்தே, இவ்வாறு சட்டவிரோத சிகரெட்டுகள் 400 மீட்கப்பட்டுள்ளனவென, பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட குறித்த நபர், உரிய சிகரெட்டுகளுடன் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனவும் மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park 077 757 0124 021 567 5566
NPcpark 077 336 6443 021 222 9581
northernpcpark 075 555 7327 021 222 2050
Northern PC Park 071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.02.2020 இல் வெளியிடப்பெற்றது.